

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2021

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

பதிப்பு

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

2022

இலங்கை, பேராதனை விவசாயத் திணைக்கள முன்னேற்ற கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவினால்
இவ்வறிக்கை தொகுக்கப்பட்டு விவசாயப்பிரசுரப்பிரிவினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

அனைத்து உரிமைகளையும் கொண்டது. சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதிப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர, ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டாது. இலங்கை விவசாயத் திணைக்களம் வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்காக இவ்வறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. இந்த பதிப்புரிமையானது விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

2021ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : விவசாயத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல:285

உள்ளடக்கம்

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 1

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 9

அத்தியாயம் 03 - 2021 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 23

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள் 28

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 37

அத்தியாயம் 06 - மனித வளங்களின் விபரம் 38

அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை 39

இணைப்புகள் 40

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

விவசாயத் திணைக்களமானது விவசாய அமைச்சின் கீழ் இயங்கும், உயர் கல்வித் தகமைகளுடன்கூடிய தொழில் வல்லுநர்களையும், தொழில்நுட்ப அலுவலர்களையும், தீவெங்கிலும் அமைந்துள்ள அலகுகளின் வலையமைப்பையும் கொண்ட பெரிய அரச திணைக்களங்களில் ஒன்றாகும்.

விவசாயியின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றினை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பான விவசாய உற்பத்திகளை ஏற்கக் கூடிய விலை ஒன்றிற்குப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றிற்காக பசுமை விவசாயக் கொள்கையுடனான உணவுப் பயிர்கள் துறையில் விளைதிறன் மற்றும் உற்பத்தி என்பவற்றினை நிலையான வகையில் விருத்தி செய்தல் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் இலக்குகள் முன்னோக்கப்படுகின்றன.

விவசாயத் திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகளில்ஆராய்ச்சி, விரிவாக்கம், கல்வி,விதை, நடுகைப்பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றோடு, தாவரத் தடுப்புக்காப்பு, மண் பாதுகாப்பு, பீடை நாசினிகள்கட்டுப்பாடு ஆகிய ஒழுங்காற்றல் சேவைகளும் உள்ளடங்கியுள்ளன.

விவசாயத் திணைக்களத்தின் முகாமைத்துவ கட்டமைப்பில் நெற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நான்கு பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களும்; விதை அத்தாட்சிப்படுத்தலிற்கும், பயிர் பாதுகாப்பிற்குமான நிலையம், விதை, நடுகைப்பொருட்களிற்கான அபிவிருத்தி நிலையம், விரிவாக்கத்திற்கும், பயிற்சிக்குமான நிலையம், விவசாயத் தகவல்களிற்கும், தொடர்பாடல்களிற்குமான தேசிய நிலையம், சமூகப் பொருளியல் திட்டமிடல் நிலையம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் ஆகிய ஆறு தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் நிலையங்களும்; முன்னேற்றக் கண்காணிப்பு, மதிப்பீட்டு அலகு, நிர்வாகப் பிரிவு, பொறியியல் பிரிவு, நிதிப் பிரிவு ஆகிய நான்கு துணைச் சேவை அலகுகளும் அடங்கியுள்ளன.

1.2 நிறுவனத்தின் தொலை இலட்சியம், பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தொலை இலட்சியம்:தேசத்தின் சௌபாக்கியத்திற்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்.

பணிக்கூற்று:மேம்படுத்தப்பட்டவிவசாயத் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்து அவற்றை பரப்புவதுடன் விவசாயிகளை மையப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் தேசத்தின் உணவு, போசணைப் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய, நிலைபேறான, சமத்துவமான விவசாய அபிவிருத்தியை அடைதல்.

குறிக்கோள்கள்:


- உணவுப் பயிர்ச் செய்கைக்கான உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல்.
- நிலையான மற்றும் சூழலுக்கு சாதகமான கமத்தொழிலினை உறுதிப்படுத்தல்.
- நிலைபேறான பயிர்ச் செய்கையை உறுதிப்படுத்தல்.
- தொழிலாளர், காணி ஆகியவற்றின் பயன்பாட்டு வினைத்திறனை விருத்தி செய்தல்.
- விவசாயத் துறையில் அனைத்து பங்குதாரர்களையும் வலிமைப்படுத்தல்.
- விவசாயத் துறையில் மனிதவள ஆற்றலை அபிவிருத்தி செய்தல்.
- தரமான விதை, நடுகைப் பொருட்கள் பங்குதாரர்களிற்குக் கிடைக்கும் தன்மையை உறுதி செய்தல்.
- நில, நீர் வளங்களை உகந்த அளவில் பயன்படுத்தல்.
- திட்டமிடல், கொள்கைத் தீர்மானங்கள், கொள்கை வழிகாட்டல் ஆகியவற்றிற்கு உதவுதல்.
- விதை, நடுகைப் பொருட்கள், விவசாய உற்பத்திகளின் தர நியமங்களை உறுதி செய்தல்.
- நாட்டின் தாவர இனங்களை தீங்கு விளைவிக்கும்அந்நிய இனங்களிலிருந்து பாதுகாத்தல்.

- விவசாய உற்பத்திகளுக்கான அந்நியச் செலாவணியை அதிகரிகரிப்பதற்காக ஆரோக்கியமான தாவரங்கள், தாவர உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான வசதிகளை செய்து கொடுத்தல்.
- சுற்றாடலையும், பொது மக்களையும் பீடைநாசினிகளின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தல்.
- தாவரக் கரு மூளவளங்களின் நிலைபேறான பயன்பாட்டினை உறுதி செய்தல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

- புதிய வர்க்கங்களையும், பொருத்தமான விவசாய தொழில்நுட்பங்களையும் விருத்தி செய்தல்.
- விவசாயத் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரப்புதல்.
- தரமான விதை, நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்தலும், விநியோகித்தலும்.
- தாவரக்கரு மூலவளங்களைப் பேணுதல்.
- விதைகள் சட்டம், தாவரப் பாதுகாப்புச் சட்டம், மரங்களை வெட்டி வீழ்த்துவதற்கான சட்டம், பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் மண் பாதுகாப்புச் சட்டம் என்பவற்றினை நடைமுறைப்படுத்தல்.
- அத்தாட்சிப்படுத்தல் மூலம் விதைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல்.
- NVQ 5, 6 டிப்ளோமா மட்டத்தை அடைவதற்கான விவசாயக் கல்வியை வழங்கலும், அரச அலுவலர்கள், விவசாயிகளின் திறன்களை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளை வழங்கலும்.

1.4 நிறுவன விளக்கப்படம் - விவசாயத் திணைக்களம்



(நெ.ஆ.அ..நி) -நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம்
(வ.ப.ஆ.அ.நி.) -வயற்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம்
(பூ.ப.ஆ.அ.நி) -பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம்
(ப.ஆ.அ.நி.) -பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
(இ.வ.மு.நி.) -இயற்கை வள முகாமைத்துவ நிலையம்
(ச.பொ.தி.நி.) -சமூகபொருளியல், திட்டமிடல் நிலையம்
(வி.ந.பொ.அ.நி) -விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம்
(வி.அ.தா.பா.நி) -விதை அத்தாட்சிப்படுத்தல் தாவரப்பாதுகாப்பு நிலையம்
(வி.ப.நி) -விரிவாக்கல் பயிற்சி நிலையம்
(தே.வி..த.தொ.நி.) -தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம்
(மு.க.ம.அ) -முன்னேற்ற கண்காணிப்பு, மதிப்பீட்டு அலகு

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

1.5.1 நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்–பத்தலகொடை

1.5.1.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்- போம்புவெல

1.5.1.2 நெல் ஆராய்ச்சி நிலையம் -அம்பலாந்தொட்டை.

1.5.1.3 நெல் ஆராய்ச்சி நிலையம் -பெந்தோட்டை

1.5.1.4 நெல் ஆராய்ச்சி நிலையம்-லபுதுவ

1.5.1.5 நெல் ஆராய்ச்சி நிலையம் -சம்மாந்துறை

1.5.1.6 நெல் ஆராய்ச்சி நிலையம் -பரந்தன்

1.5.1.7 நெல் ஆராய்ச்சி நிலையம் -முருங்கன்

1.5.2 வயற்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - மஹா இலுப்பல்லம

1.5.2.1 அவரைத் தானிய, எண்ணெய்ப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் -அங்குணகொலபெலஸ்ஸ

1.5.2.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் - அரலகன்வில

1.5.2.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் -கிளிநொச்சி

1.5.2.4 இசைவாக்க ஆராய்ச்சி நிலையம்-வவுனியா

1.5.2.5 விவசாய ஆராய்ச்சி நிலையம்-திருநெல்வேலி

1.5.2.6 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் - மஹாஇலுப்பள்ளம

1.5.3 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - கன்னொறுவை

1.5.3.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் – பண்டாரவளை

1.5.3.2 விவசாய ஆராய்ச்சி நிலையம் - சீதா எலிய

1.5.3.3 விவசாய ஆராய்ச்சி நிலையம்- தெலிஜ்ஜவில

1.5.3.4 விவசாய ஆராய்ச்சி நிலையம்-கிராந்துருகோட்டை

1.5.3.5 விவசாய ஆராய்ச்சி நிலையம்–கற்பிட்டி

1.5.3.6 உணவு ஆராய்ச்சி பிரிவு– கண்ணொறுவ

1.5.3.7 பூங்கனியியல் ஆராய்ச்சி பண்ணை –கண்னொறுவை

1.5.3.8 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு-வாகொல்ல

1.5.3.9 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு - திப்பட்டுமுல்ல

1.5.3.10 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு -வாரியபொல

1.5.3.11 இசைவாக்க ஆராய்ச்சிப் பிரிவு -தப்போவ

1.5.3.12 பூங்கனியியல் ஆராய்ச்சி பண்ணை -பஸ்யால

1.5.4 பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் - ஹொரன

1.5.4.1 நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்- மாகந்துர

1.5.4..2 தாவர வைரசு சுட்டியிடல் நிலையம் - ஹோமாகம

1.5.4.3 பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் - கண்ணொறுவ

1.5.4.4 விவசாய ஆராய்ச்சி நிலையம்-மதுருகெட்டிய

1.5.4.5 விவசாய ஆராய்ச்சி நிலையம்-முதுகண்டிய

1.5.4.6 சித்திரசு ஆராய்ச்சி நிலையம்-பிபிலை

1.5.5 இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் – பேராதனை

1.5.5.1 இயற்கைவளங்கள் முகாமைத்துவ நிலையம் உப அலகு – குண்டசாலை

1.5.6 சமூக பொருளியல், திட்டமிடல் நிலையம்-பேராதனை

1.5.7 விரிவாக்கம், பயிற்சி நிலையம் - பேராதனை

1.5.7.1 சேவைக்கால பயிற்சி நிலையம்–அங்குணகொலபெலஸ்ஸ

1.5.7.2 சேவைக்கால பயிற்சி நிலையம்–கன்னொறுவ

1.5.7.3 சேவைக்கால பயிற்சி நிலையம்–ஹன்சயாபாலம

1.5.7.4 பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் –அநுராதபுரம்

1.5.7.5 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம்– அட்டாளைச்சேனை

1.5.7.6 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – அம்பாறை

1.5.7.7 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – பொலன்னறுவ

1.5.7.8 மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் –வீரவில

1.5.7.9 விவசாய பாடசாலை–அங்குணகொலபெலஸ்ஸ

1.5.7.10 விவசாய பாடசாலை- கரபிஞ்ச

1.5.7.11 விவசாய பாடசாலை–குண்டசாலை

1.5.7.12 விவசாய பாடசாலை–பெல்வெஹெர

1.5.7.13 விவசாய பாடசாலை–வவுனியா

1.5.7.14 விவசாய பாடசாலை–அநுராதபுரம்

1.5.7.15 விவசாய பாடசாலை–பிபிலை

1.5.7.16 விவசாய பாடசாலை–லபுதுவ

1.5.7.17 விவசாய பாடசாலை–பாலமுனை

1.5.7.18 விவசாய பாடசாலை–பரந்தன்

1.5.7.19 விவசாய பாடசாலை–வாரியப்பொல

1.5.7.20 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது, அம்பாறை

1.5.7.21 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது, அநுராதபுரம்

1.5.7.22 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது, ஹம்பாந்தோட்டை

1.5.7.23 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது, கண்டி

1.5.7.24 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது, மொனராகலை

1.5.7.25 பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் / மாகாணங்களிற்கு இடைப்பட்டது, பொலன்னறுவ

1.5.7.26 தேனீ அபிவிருத்தி பிரிவு-பிந்துனுவெவ, பண்டாரவளை

1.5.7.27 இளம் விவசாயிகள் கழகம்–தலைமையகம், பேராதனை

1.5.7.28 விவசாய வணிக ஆலோசணைப் பிரிவு–பேராதனை

1.5.8 தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையம் – கன்னொறுவை

1.5.8.1 விவசாய பிரசுரப் பிரிவு – கன்னொறுவ

1.5.8.2 பண்ணை ஒலிபரப்பு சேவை - கொழும்பு

1.5.8.3 பண்ணை ஒலிபரப்பு சேவை - கண்டி

1.5.8.4 பண்ணை ஒலிபரப்பு சேவை - அநுராதபுரம்

1.5.8.5 பண்ணை ஒலிபரப்பு சேவை - மாத்தறை

1.5.8.6 விவசாய தொழில்நுட்ப பூங்கா – கன்னொறுவ

1.5.8.7 விவசாய தொழில்நுட்ப பூங்கா – பட்ட அத

1.5.9 விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம் – பேராதனை

1.5.9.1 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - அலுத்தரம

1.5.9.2 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – அம்பாறை

1.5.9.3 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – பட்ட அத

1.5.9.4 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – கொழும்பு

1.5.9.5 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - கந்தளாய்

1.5.9.6 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் –கிளிநொச்சி

1.5.9.7 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – குண்டசாலை

1.5.9.8 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – மஹா இலுப்பள்ளம

1.5.9.9 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் –நிக்கவெரட்டிய

1.5.9.10 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் –நுவரெலியா

1.5.9.11 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – பெல்வெஹெர

1.5.9.12 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – பொலன்னறுவ

1.5.9.13 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - தெலிஜ்ஜவில

1.5.9.14 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் - வவுனியா

1.5.9.15 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – கரடியனாறு

1.5.9.16 பிராந்திய பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் – முருங்கன்

1.5.9.17 அரச விதைப்பண்ணை – அலுத்தரம

1.5.9.18 அரச விதைப்பண்ணை – அம்பலாந்தோட்டை

1.5.9.19 அரச விதைப்பண்ணை – அம்பேபுஸ்ஸ

1.5.9.20 அரச விதைப்பண்ணை – மஹா இலுப்பல்லம

1.5.9.21 அரச விதைப்பண்ணை - கந்தளாய்

1.5.9.22 அரச விதைப்பண்ணை – மித்தெனிய

1.5.9.23 அரச விதைப்பண்ணை - பொலன்னறுவ

1.5.9.24 அரச விதைப்பண்ணை - மல்வத்த

1.5.9.25 அரச விதைப்பண்ணை - முருங்கன்

1.5.9.26 அரச விதைப்பண்ணை - கரடியனாறு

1.5.9.27 அரச விதைப்பண்ணை - பரந்தன்

1.5.9.28 அரச விதைப்பண்ணை – குண்டசாலை

1.5.9.29 அரச விதைப்பண்ணை - மீபிலிமான

1.5.9.30 அரச விதைப்பண்ணை - ரஹங்கல

1.5.9.31 அரச விதைப்பண்ணை – உடரதெல்ல

1.5.9.32 அரச விதைப்பண்ணை - சீதாஎலிய

1.5.9.33 அரச விதைப்பண்ணை – பட அத்த

1.5.9.34 அரச விதைப்பண்ணை – கந்தபொல

1.5.9.35 அரச விதைப்பண்ணை - பீதுருதாலகால

1.5.9.36 அரச விதைப்பண்ணை - வல்பிட

1.5.9.37 அரச விதைப்பண்ணை - உள்பதகம

1.5.9.38 அரச விதைப்பண்ணை – பண்டாரகம

1.5.9.39 அரச விதைப்பண்ணை - தெலிஜ்ஜவில

1.5.9.40 அரச விதைப்பண்ணை – பெல்வெஹெர

1.5.9.41 அரச விதைப்பண்ணை – இங்கினிமிடிய

1.5.9.42 அரச விதைப்பண்ணை - வீரபான

1.5.9.43 அரச விதைப்பண்ணை – இலுவங்குளம்

1.5.9.44 அரச விதைப்பண்ணை – அம்பதென்ன

1.5.10 விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம்– கன்னொறுவ

1.5.10.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை) - கன்னொறுவ

1.5.10.2. தாவரப் பாதுகாப்புச் சேவை - கன்னொறுவ

1.5.10.3 பீடைகொல்லிப் பதிவாளர் அலுவலகம் - பேராதனை

1.5.10.4 தாவர கருவள நிலையம்) - கன்னொறுவ

1.5.10.5 தேசிய தாவர தடுப்புக்காப்பு சேவை – கட்டுநாயக்க

1.5.11 நிர்வாகப் பிரிவு–பேராதனை

1.5.12 தாபனப் பிரிவு – பேராதனை

1.5.13 பொறியியற்பிரிவு- பேராதனை

1.5.14 நிதிப்பிரிவு–பேராதனை

1.5.15 உள்ளகக் கணக்காய்வு அலகு

1.5.16 முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு– பேராதனை

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்/ நிதியங்கள்

இல்லை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

கருத்திட்டத்தின் பெயர்	**நிதியளிக்கும் நிறுவனம்**	**மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்.)**	**கால எல்லை**
01.ஆசியாவின் நெல் அறுவடையின் இடைவெளியினை நிரப்புதல்.	IRRI	3.33	2013 - 2022
02. AFACI உறுப்புரிமை நாடுகளுக்காக உவர்த் தன்மைக்கு தாக்குப் பிடிக்கும் உயர்ரக நெல் இனங்களைத் தெரிவு செய்தல் மற்றும் பரவச் செய்தல்	AFACI	3.33	2019 - 2021
03. பல்வேறு சூழல்களில் நெருங்கிய விதானச் சூழலில் தெளிவான தன்மை மற்றும் நெல்லின் வெப்ப உறிஞ்சல் சிறுகாம்பிலி மலட்டுத்தன்மை என்பன தொடர்பான ஆய்வு	NIAES	0.16	2019 - 2022
04. ஆசிய வலயத்தில் இடம்பெயர் பீடைகளுக்கான தொற்றுநோய் விஞ்ஞான தகவல்கள் இடைப் பரிமாற்றுக் கட்டமைப்பு ஒன்றினைக் கட்டியெழுப்புதல்	AFACI	5.34	2019 - 2022
05.இலங்கையில் சோயா போஞ்சியின் விளைதிறனினை விருத்தி செய்வதற்கான தொழிநுட்பத்தினைத் தோற்றுவித்தல்.	KOPIA	6.21	2018 - 2021
06. உயர் தரத்திலான வெங்காய விதை உற்பத்தி மாதிரிக் கிராமத்தின் பின்னாய்வு முகாமைத்துவம்	KOPIA	1.74	2019 - 2021
07. இலங்கையில் பண்ணைகளை அடிப்படையாகக் கொண்ட கலப்பின மிளகாய் விதை உற்பத்திக் கட்டமைப்பு ஒன்றினைத் தாபித்தல்.	KOPIA	5.995	2019 - 2021
08 ஆசியாவின் காய்கறி வர்க்கங்களின் அபிவிருத்தி	AFACI	3.51	2020 - 2022
09. ஜமனாரங்களின் தரம் மற்றும் விளைதிறனினை அதிகரிப்பதன் ஊடாக இலங்கை விவசாயிகளின் வருமானத்தினை அதிகரித்தல்	KOPIA	5.96	2018 - 2023
10. காளான் விவசாயியின் வருமானத்தினை அதிகரிப்பதற்காக உற்பத்தி மற்றும் பயன்பாட்டுத் தொழிநுட்பத்தினைத் தோற்றுவித்தல்.	KOPIA	7.73	2017 - 2022

கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிக்கும் நிறுவனம்	மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்.)	கால எல்லை
11. நிலையான சேதன விவசாயத்திற்கான ஆசிய வலையமைப்பு	AFACI	0.61	2016 - 2021
12. விவசாய உற்பத்திகளைத் தயாரிக்கும் தொழிநுட்பத்தினைத் தோற்றுவித்தல்	AFACI	5.1	2019 - 2021
13. பின் அறுவடைக் கைநூல்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் பாவனை	AFACI	0.78	2016 - 2021
14. இலங்கையின் உணவுப் பயிர்களில் கருப்பு வெட்டுப் புழுக்களைக் (*Helicoverpa* spp,) கட்டுப்படுத்துவதற்காக நியுக்ளியோ பொலிஹெட்ரொன் வைரஸ்களின் Nucleo polyhedron viruses (NPV) வினைத்திறனினை பண்பு விரித்துரைத்தல்	USDA	1.12	2020 - 2023
15. இலங்கையின் விஷேட சூழல் மாசடைதல் வலயங்கள் மூன்றின் வளிமண்டல நைதரசன் மாசடைதல் மூலத்தை மதிப்பீடு செய்தல், சுற்றாடல் நிலைபேற்றுத்தன்மை மற்றும் மானிட சுகாதாரம் என்பவற்றிற்கு ஏற்படுத்தும் பாதிப்பு மற்றும் தீர்வு நடவடிக்கைகளைக் கண்டறிதல்.	IAEA	0.35	2018 - 2022
16. இலங்கையில் பிரகடனம் செய்யப்பட்ட பாதுகாப்பு வலயங்களில் மலைநாட்டு விவசாய நீர்ப்பள்ளத்தாக்குகளில் விவசாயக் கழிவு மூலங்களைக் கொண்டு செல்லும் வழிமுறைகளை அடையாளம் காணல்.	IAEA	0.94	2018 - 2023
17. ஆசியாவின் மண் வரைபடம் மற்றும் தேசிய மண் தகவல்கள் கட்டமைப்பின் அபிவிருத்தி	AFACI	4.5	2019 - 2023
18. உள்நாட்டு ரீதியில் பொருத்தமான GAP நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விவசாய உற்பத்திகளைப் பாதுகாக்கும் தகவல்கள் கட்டமைப்பினைக் கட்டியெழுப்பதல்	AFACI	0.4	2016 - 2021
19. விவசாயத் தொழிநுட்பத் தகவல்கள் வலையமைப்பு	AFACI	1.68	2010 - 2021
20. பெறுமதிச்சங்கிலி (valuechain) அபிவிருத்தியின் மீது கவனம் செலுத்தி சிற்றளவிலான விவசாய வியாபாரங்களின் ஊடாக சாக் வலயத்தில் சிறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்துல்.	SDF	5.0	2020 - 2021

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

சிறப்பு அடைவுகள்

நெல்

- தேசிய ஒருங்கிணைப்பு நெல் வகைகளை ஒத்திகை பார்க்கும் போது 4½ மாத வகைக்குரிய உயர் இனப்பெருக்கப் பரம்பரைகள் இரண்டு (20-470, 20-2378) தொடர்ந்தும் எதிர்வரும் ஒத்திகைகளுக்காக பரிந்துரை செய்யப்பட்டன. 3½ மாத கால வயது வகையின் கீழ் 34 உயர் பரம்பரைகள் ஆரம்ப அறுவடை பரிசோதனைக்காகவும் 11 பிரதான அறுவடை பரிசோதனைக்காகவும் உட்படுத்தப்பட்டதுடன் 2 பரம்பரைகள் எதிர்பார்க்கக்கூடிய பரம்பரைகளாக தெரிவு செய்யப்பட்டன. 3 மாத கால வயது வகைக்குரிய 27 உயர் பரம்பரைகள் ஆரம்ப அறுவடை பரிசோதனைக்கும் 14 பிரதான அறுவடைபரிசோதனைக்கும் உட்படுத்தி 4பரம்பரைகள் எதிர்பார்ப்பு வைக்கக்கூடிய உயர் பரம்பரைகளாகத் தெரிவு செய்யப்பட்டன. 2½ மாத கால வகையின் கீழ் 19 மற்றும் 10 உயர் பரம்பரைகள் ஆரம்ப மற்றும் பிரதான அறுவடை சோதனைகளுக்காக உட்படுத்தி முறையே உயர் பரம்பரைகள் இரண்டு வீதம் தெரிவு செய்யப்பட்டன.

- சீரகச்சம்பா வகையில் எரிபந்தம் மற்றும் பற்றீரியா இலை வெளிறல் ஆகிய நோய்களுக்கு தாக்குப் பிடிக்கும் பரம்பரைகளை உற்பத்தி செய்யும் இனப்பபெருக்கப் பரம்பரைகளுள் இரண்டு பரம்பரைகள் மேற்படி இரண்டு நோய்களுக்குமே எதிர்விளைவினைக் காட்டியுள்ளதுடன் தொடர்ந்தும் களப்பரீட்சிப்பினை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டன.

- இளம் நாற்றுக்கு சேதம் விளைவிக்கும் நாற்று மூட்டுப்பூச்சியின் சேதம் மற்றும் பின்னர் வரும் கட்டங்களில் ஏற்படும் கபிலத்தாவரத்தத்தி, தண்டு துளைப்பானின் சேதம், இலை சுருட்டியின் சேதம் மற்றும் நெல் மூட்டுப்பூச்சியின் சேதம் என்பவற்றினை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்துக் கொள்வதற்காக நெல் நாற்றில் எதிர்ப்புச் சக்தியினைக் கொண்ட ஊக்கி சிலிக்கன் தயாரிப்பு ஒன்றினை நாற்று நடப்பட்டு இரண்டு வாரங்களில் பயன்படுத்தல் பொருத்தமானது என அவதானிக்கப்பட்டது. பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- இலங்கைக்கு இறக்குமதி செய்யும் பாஸ்மதி அரிசி உரிய தரத்துடன் கூடிய பாஸ்மதியா என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக இலங்கை சுங்கத்திலிருந்து அனுப்பப்பட்ட 267 அரிசி மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றுள் கிட்டத்தட்ட 38.4% தரமான பாஸ்மதி அரிசியிலுள்ள பண்புகளைக் கொண்ட அரிசி மாதிரிகள் என அடையாளம் காணப்பட்டன.

- பாரம்பரிய நெல் வர்க்கங்களை சேதன நிலைமையின் கீழ் பயிரிடும் போது பெரசூட் தொழில்நுட்பத்தின் மூலம் பயிரிடுவதற்கான பொருத்தமான நாற்றுமேடைத் தட்டுக்களின் எண்ணிக்கையினை கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பெறுபேறாக ஒரு ஏக்கருக்கு 400 நாற்றுமேடைத் தட்டுக்கள் பொருத்தமானது எனக் கண்டறியப்பட்டது. இங்கு பாரம்பரிய நெல் வகைகள் 4 பயன்படுத்தப்பட்டன. சுவந்தெல், பொக்காளி, களு ஹீனெட்டி மற்றும் பச்சைப்பெருமாள் என்பன மேற்படி நான்கு நெல் வகைகளும் ஆகும்.

- பத்தலேகொட உட்பட சகல நெல் ஆராய்ச்சி நிலையங்களும் பல்வேறு வகையான விதை நெல் உற்பத்திகளை மேற்கொள்கின்றன. இனப்பெருக்க விதை 7000 கிலோ கிராமும், அத்திவார விதை, முளைத்தல் பரிசோதிக்கப்பட்ட மற்றும் வர்த்தக விதைகள் என்ற வகையில் 34,170 கிலோ கிராமும் பாரம்பரிய வர்க்கங்களில் கிட்டத்தட்ட (அண்ணளவாக) 2,470 கிலோகிராமும் என்ற வகையில் விதை நெல் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நெல் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக நெற் செய்கை தொடர்பாக விவசாயக் குழுக்களுக்கான பயிற்சிகள், உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள், டிப்ளோமா மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய கோரிக்கையின் அடிப்படையிலான பயிற்சி நிகழ்ச்சிகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் பல்வேறு குழுக்களாக வருகை தந்த 2301 நபர்களுக்காக நெற்செய்கை தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஆசிய உணவுகள் மற்றும் விவசாய ஒத்துழைப்பின் கீழ் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட உவர்த்தன்மைக்குத் தாக்குப்பிடிக்கும் இனப்பெருக்கப்பரம்பரைகளைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 7 ஆசிய நாடுகளுக்குள் சிறந்து விளங்கும் நாட்டிற்கு உரித்தாகும் விருது 2021 ஆம் ஆண்டின் நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் இனப்பெருக்கப் பிரிவில் உள்ள திருமதி. ஆர்.எம்.என்.எச். சேனாநாயக்க அவர்களினால் வெற்றி ஈட்டிக்கொள்ளப்பட்டது.

மேலதிக உணவுப் பயிர்கள்

- கௌபி மற்றும் பயறு ஆகிய பயிர்வகைகளைப் பயிரிடும் போது வைக்கோல் மூடுபடைகள் இடப்பட்ட மற்றும் மூடுபடைகள் இடப்படாத சந்தர்ப்பங்களுடன் ஒப்பிடும் போது பொலித்தீன் மூடுபடைகள் பயன்படுத்தப்பட்டதன் ஊடாக சிறந்த வளர்ச்சி மற்றும் அதிகூடிய அறுவடைச் செயலாற்றுகை ஒன்றும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- பயறு, கௌபி மரமுந்திரிகை அல்லது உழுந்து ஆகிய அவரைத் தாவரங்களுள் எந்தவொரு தாவரத்தையும் இலங்கையின் உலர் வலயத்தில் விஷேடமாக முதல் போகத்தில் வாழையுடன் துணைப்பயிர் ஒன்றாக வெற்றிகரமாகப் பயிரிட முடியும் என்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டது.
- "அக்ரா" எனப்படும் கோலிகூட்டு வாழை வர்க்கத்தின் ஆண் பூவினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உடலுக்கு வெளியே மீள்பிறப்பாக்கம் செய்யப்படும் கன்றுகளின் விஷேட பண்புகள் (விளைச்சலின் அதிகூடிய கெட்டியான (திண்மத்) தன்மைஇல்லாமல் போதல் மற்றும் சுவை) மாற்றமடையவில்லை.
- பகுதியளவில் சேதமடைந்த மரமுந்திரிகைகளின் முளைத்தல், உயிரோட்டமான தன்மை மற்றும் விளைச்சல் என்பவற்றினை அதிகரிப்பதற்காக ஹைட்ரோ – பிரைமிங் (Hydro – priming) தொழில்நுட்ப முறைமை பயனுறுதி உடையது என அடையாளம் காணப்பட்டது.
- ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் வகையில் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு போகங்களிலும் விவசாயத்துறையில் விவசாயத் திணைக்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நைதரசன் (N) பொசுபரசு (P) மற்றும் பொற்றாசியம் (K), விகிதங்களுடன் ஒப்பிடும்போது ரைசோபியம் விதை உட்புகுத்தலுடன் ஆரம்ப கனிய N உரம் (யூரியா) 1/3 சதவிகிதம் மற்றும் விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட P மற்றும் K சதவிகிதத்திலான உரங்களை வழங்கும் போது சோயா போஞ்சிகளில் 13% தொடக்கம் 25% வரை விளைச்சலில் அதிகரிப்பு ஒன்று பதிவிடப்பட்டது.
- விஷேடமாக பெரும்போகத்தின் போது பலவீனமான வடிகாலமைப்பு நிலைமையின் கீழ் விதைகள் முளைக்கும் போது ஏற்படும் சேதத்தினை குறைத்துக்கொள்வதற்கு பல்பகுதிய பூச்சிடப்பட்ட சோயா போஞ்சி விதைகளை விளைதிறன் உடையது என அடையாளம் காணப்பட்டது.
- இரண்டு வரிசைகளுக்கிடையிலான இடைவெளி 90 செ.மீ. ஆக அமையும் வகையில் செ.மீ. 45 x செ.மீ 30 அளவிலான 4 வரிசைகளில் சோளப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளல், விளைச்சலுக்கு சேதமின்றி படைப்புழுவினைக்கட்டுப்படுத்துவதற்காக இரசாயனப் பொருட்களை இடுதல் மற்றும் விதைகளைத் தூவுதல் என்பன இலகுவாகும் பயிர்ச்செய்கை இடைவெளி என அடையாளம் காணப்பட்டது.
- கொம்போஸ்ட் (ஹெக்டயாருக்கு தொன் 10) அல்லது உயிரியல் கரியுடன்(ஹெக்டயாருக்கு 10 தொன்) கொம்போஸ்ட் (ஹெக்டயாருக்கு 10 நெல்) வீதம் சேதனப் பொருட்களை இடுதல் பெரிய வெங்காயத்தின் விளைச்சலை விருத்தி செய்யும் போது விளைதிறன் உடையதாக அடையாளம் காணப்பட்டது. பெரிய வெங்காயத்தின் விளைச்சலை மேலும் அதிகரிப்பதில் வைக்கோல் (ஹெக்டயாருக்கு 5 தொன்) அல்லது தெறிதிறன் உடைய பொலித்தீன் மூடுபடைகளைப் பயன்படுத்தல் மிகவும் பயனுறுதி உடையதாகக் காணப்பட்டது.
- சோளப்பொரி (Popcorn) பயிர்ச் செய்கைக்காக விளைதிறன் மிக்க பயிராக்கவியல் முகாமைத்துவப் பொதி ஒன்றாக ஒரு குழிக்கு ஒரு கன்று என்ற வகையில் 45 செ.மீ x 30 செ.மீ. இடைவெளியில் கன்றுகளை நட்டு நைதரசன், பொசுபரசு மற்றும் பொற்றாசியம் மூலப் பொருட்களை முறையே ஹெக்ரயார் ஒன்றிற்கு 150-46-30 கிலோ கிராமினை இடுதல் கண்டறியப்பட்டது
- ட்ரைகொடேர்மா (*Trichoderma)* உற்பத்திகளின் திண்மை நிலையினைப் பயன்படுத்தி வெங்காய கருப்புநிற பங்கசினைக் கட்டுப்படுத்துவதற்கான களப்பிரயோக நடப்பொழுங்கு ஒன்று (Protocol) கட்டியெழுப்பப்பட்டது.
- மிளகாய்ச் செடிக்கு ஏற்படும் எந்திரக்னோஸ் நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு எஸொக்ஸ்சிட்ரோபின் 60 உடன் குளோரோதெலொனில் லீற்றர் ஒன்றிற்கு 500 கிராம் SL விளைதிறன் மிக்கது என்பது கண்டறியப்பட்டது.
- மரமுந்திரிகை துருப்பிடித்தல் (Groundnut Rust) நோய்க்கு தீர்வாக கந்தகம் 80 WDG பொருத்தமானது என மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.
- சோளப் பயிர்ச் செய்கையில் படைப்புழுவினைக் கட்டுப்படுத்துவதற்காக 3G கரைசலினை நீருடன் 10% (V/V) சதவிகிதத்தில் இடுதல் பயனுள்ளதாகக் காணப்பட்டது. குடம்பிகள் உருவாகும் ஆரம்ப கட்டத்திலேயே மாலை வேளையில் மேற்படி கரைசலினை இடுதல் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுத்தந்தது.
- மிளகாயின் உயர் தரத்திலான காய்களுடன் அதிகூடிய அறுவடையினைப் பெற்றுக்கொள்வதற்காக காய்கள் காய்க்கும் பருவத்தில் இலைகளுக்கு தெளிப்பான் ஒன்றாக முருங்கை இலைச்சாற்றினை (MLE 100%) இடுதல் விளைதிறன் மிக்க வழிமுறை ஒன்றாக அடையாளம் காணப்பட்டது.
- இலங்கையில் வட மாகாண மரமுந்திரைகைகளில் (Arachishypogeal) தண்டு அழுகும் நோயுடன் தொடர்பான பங்கசு நோய்க்காரணிகளாக ஸ்க்லெரோரியம் (sclerotium) 18 வகைகள் அடையாளம் காணப்பட்டன.

- மணித்தியாலம் ஒன்றிற்கு 30 கிலோகிராம் பயன்பாட்டுக் கொள்வனவு ஒன்றினைக் கொண்ட மிளகாய் விதைச்சாறு ஒன்றின் மூல வடிவம் (Prototype) ஒன்று வெற்றிகரமாக நவீன மயப்படுத்தப்பட்டது.
- வர்த்தகப் பயிர்ச் செய்கைக்காக தனியார் பிரிவின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட ஹெக்டயார் ஒன்றிக்கு 16-20 தொன் சராசரி பச்சை மிளகாய் அறுவடை ஒன்றினைப் பெற்றுத்தரும் வெளிநாட்டு மிளகாய் கலப்பினங்கள் மூன்று பரிந்துரை செய்யப்பட்டன.
- சாக்லேட் போல் கைத்தொழிலுக்குப் பொருந்தும் ஹெக்டயார் ஒன்றிற்கு 2.5 தொன்னிலும் அதிகமான சராசரி அறுவடை ஒன்றினைப் பெற்றுத் தரும் சிறு விதைகளுடன் கூடிய மரமுந்திரிகை வர்க்கம் பொதுவான பயிர்ச் செய்கைக்காக ANKGN4வர்க்கம் என்ற பெயரில் விடுவிக்கப்பட்டது.
- ஹெக்டயார் ஒன்றிற்கு கிட்டத்தட்ட (அண்ணளவாக) 1 தொன் மொத்த அறுவடையினைப் பெற்றுத்தரும் தண்டு மற்றும் வேர் அழுகும் நோய்க்கு நடுநிலையான வகையில் தாக்குப்பிடிக்கும் கருப்பு நிற விதைகளுடனான எள்ளு வர்க்கம் ANKSE 3 என்ற பெயரில் பொதுப் பயிர்ச்செய்கைக்காக விடுவிக்கப்பட்டது.
- ஹெக்டயார் ஒன்றிற்கு 20-22 தொன் மொத்த அறுவடையினைப் பெற்றுத்தரும் கொத்து வெங்காய வர்க்கம் ANKCL 01 என்ற பெயரில் பொதுவான பயிர்ச்செய்கைக்காக விடுவிக்கப்பட்டது.
- எளிய ஒழுங்குமுறை மீண்டுவரும் (simple sequence repeat / SSR)அடையாளத்தினைப் பயன்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட நடைமுறை ஒழுங்கானது, MICH HY 1 மற்றும் MICH HY 2 மிளகாய்க் கலப்பினங்களில் விதை அத்தாட்சிப்படுத்தல் நடைமுறை ஒழுங்குவிதிகளின் போது பயன்படலாம். மேலும் இந்தக் கண்டுபிடிப்பானது MICH HY 1 மற்றும் MICH HY 2மிளகாய்க் கலப்பின விதை இருப்புக்களில் கலப்பினம் அல்லாத வகை கலப்பதனை அடையாளம் காண்பதற்கு இனப்பெருக்கம் செய்பவர்களுக்கும் அவ்வாறே பயிர் செய்பவர்களுக்கும் பயன்படலாம்.
- கருப்பு எள்ளில் இருந்து எண்ணெய்யினைப் பிழிந்தெடுக்கும் நடைமுறையின் போது சிறந்த தரத்திலான அதிகூடிய அளவிலான எண்ணெய்யினைப் பெற்றுக்கொள்ளும் பொருத்தமான வழிமுறை 180^0C வெப்ப நிலையில் 15 நிமிடங்கள் வறுத்தல் (roasting) என்பது கண்டறியப்பட்டது.
- சோயாப் பால் உற்பத்திக்காக PM 13 மற்றும் PM 25 வர்க்கங்கள் (பரம்பரைகள்) மிகவும் பொருத்தமானவை என அடையாளம் காணப்பட்டன.

தோட்டப் பயிர்கள்

காய்கறிகள்

- சேதனப் பயிர்ச்செய்கையின் தாவர நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக உயிரியல் தொழில்நுட்ப வழிமுறையொன்றாக ட்ரைகொடேர்மா பங்கசின் ஊடாக உயிரியல் பங்கசு கொல்லி ஒன்று தயாரிக்கப்பட்டது. இது கறிமிளகாய், தக்காளி, வட்டுக்காய், பயற்றை மற்றும் போஞ்சி பயிர்ச்செய்கையில் மண் பங்கசு நோய், இலைப்புள்ளி நோய் மற்றும் தூள் பூஞ்சனம் நோய் என்பவற்றினைக் கட்டுப்படுத்துவதற்காகவும், சலாது இலைகளில் சாம்பல் புள்ளி நோய் மற்றும் சேம்புக் கிழங்குச் செய்கையின் தண்டுக் கிழங்கு அழுகுதல் போன்ற நோய்களை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.
- காய்கறிச் செய்கையின் பீடை மயிர்கொட்டிகள் மற்றும் படைப்புழு என்பவற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக முட்டை புறவொட்டுண்ணி ரெலெனோமஸ் ரெமுஸ் *Telenomusremus* பூச்சிகளை செயற்கையாக விருத்தி செய்து இலங்கையின் விவசாயப் பிரதேசங்களுக்கு விடுவிக்கப்பட்டது. இதனூடாக அதிகூடிய பூச்சி நாசினிகளைப் பயன்படுத்தாது காய்கறிச் செய்கைகளை மேற்படி பீடைத் தாக்கங்களிலிருந்து தடுத்துக்கொள்ள இயலுமாகி உள்ளது.
- பாகல் மற்றும் தக்காளி என்பவற்றிற்காக தாவரக் கவசமிடல் போர்வை முறை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. இங்கு தனியாக ஒவ்வொரு தாவரமும் கவசம் இடப்படுவதுடன் இதனூடாக காய்கறிச் செய்கையின் வைரஸ் நோய்க் காவிகள் மற்றும் பீடைகள் வெற்றிகரமான முறையில் கட்டுப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.
- குறுகிய காலப்பகுதிக்குள் (06 வாரங்களுக்குள்) கொம்போஸ்ட் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பழங்கள்

- புதிதாக விடுவிக்கப்பட்ட ஹொரண எழுமிச்சை 01 இனால் ஒட்டு செய்யப்பட்ட 2000 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- எதிர்பார்ப்பு வைக்கக்கூடிய ஆறு அன்னாசி கலப்பினங்கள், அதிகூடிய அறுவடை மற்றும் பழம் ஒன்றின் தேவையான குணாதிசயங்கள் உள்ளடங்கிய எதிர்பார்க்கக்கூடிய இரண்டு மாங்காய் வகைகள் மற்றும் பலாவில் எதிர்பார்ப்பு வைக்கக்கூடிய சில வகைகள் என்பன மதிப்பீடு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டன.

- பூப்பூக்கும் ஆரம்ப பருவத்தில் கன்று ஒன்றிற்கு 15 கிலோ கிராம் அளவிலான டொலமைட்டினை மண்ணுடன் கலப்பதன் மூலம் மங்குஸ்தானில் மஞ்சள் நிறச்சாறு அசாதாரண தன்மையினைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

- கொலெக்ரொரிகம் தியோப்ரோமைகோலா*(Colletotrichumtheobromicola),* பைலோசிரிக்ரா எலொங்கேட் (*Phyllositicta elongate*) மற்றும் லசியோடிப்ளோடியா சூடோதியோபிரோமே*(Lasiodiplodiapseudotheobromae)* என்ற பெயரினைக் கொண்ட நுண்ணுயிர்கள் அன்னமுன்னாக் மரக்கன்றுகள் அழுகல் தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ள நுண்ணுயிர்களாக உறுதி செய்யப்பட்டது. உடலுக்கு வெளியேயுள்ள நிலைமையில் காபெண்டிசம் 50wp (687.5 ppm), ரெபியுனகொனசோல் 250 EW(375 ppm) மற்றும் தியோபனேட் மெதைல் 70 WP (687.5 ppm) என்பவற்றினைஇடுவதன் மூலம் மேற்படி நோய் குறைவடைகின்றது எனவும் கண்டறியப்பட்டது. கருவா எண்ணெய், கராம்பு எண்ணெய், சிற்றனெல்லா எண்ணெய், மற்றும் துளசி எண்ணெய் (basil oil) புற உடல் நிலைமையின் கீழ் முறையே 6000 ppm, 3000ppm, 20 000ppm மற்றும் 9000 ppm என்பன மேற்படி பங்கசு வகைகளின் விருத்தியினை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

- வர்த்தகச் செய்கைக்காக மாற்று நடுகைப்பொருள் ஒன்றாக இலை உரத்துடன் அன்னாசித் தலைகளைப் பயன்படுத்துவது வெற்றிகரமானது என்பது அடையாளம் காணப்பட்டதுடன் பழத்தின் அளவு மற்றும் தன்மை தொடர்பில் தலையின் அளவு பாதிப்புச் செலுத்துவது இல்லை என்பது அடையாளம் காணப்பட்டது. நட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் இரண்டு மாத காலம் வரை விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட இலை உரத்தினைத் தெளித்தல் மேற்கொள்ள முடியும்.

- அன்னாசி இரண்டு வரிசைகளுக்கு இடையில் கௌபியினைப் பயிரிட்டு 45 நாட்களில் முதலாவது அறுவடையினை மேற்கொண்டதன் பின்னர் கௌபி பயிர்களை மண்ணுடன் கலத்தல், தரத்தில் உயர்ரக அன்னாசிக் கன்றுகளைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான இணைந்த தாவரப் போசணை முகாமைத்துவ வழிமுறை ஒன்று என்பது அடையாளம் காணப்பட்டது.

- முள் அன்னமுன்னாவின் (*Annonamuricata*) வித்திலிப்பழங்களை உருவாக்குவதனை ஊக்குவிப்பதற்காக 1000 ppm ஜிபரெலிக் அமிலம் (GA3) மற்றும் 6000 ppm நெப்தலீன் அசெற்றிக் அமிலம் (NAA) என்பவற்றைப் பயன்படுத்த முடியும் என்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டது.

- கொய்யா வாடலினைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் ட்ரைகொடேர்மா ஹாஸியனம் (*Trichodermaharzianum*) மற்றும் ட்ரைகொடேர்மா ஹெமரம் (*Trichodermahamatum*) மொத்த நடுகைக்கான வித்துக்களைத் தயாரிப்பதற்கு பொருத்தமான ஊடகமாக உமி மற்றும் அரிசித்தவிடு 4:1 என்ற விகிதத்தில் கலந்து, கலவையுடன் குரக்கன் விதை தெரிவு செய்யப்பட்டது.

- பிரதான மூலப்பொருளாக லாவுலு மா 35% மற்றும் அரிசிமா 65% என்பவற்றினைக் கலந்து பிஸ்கட் வகை ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் அவற்றை பொலிப்ரொபிலீன்களில் (200G) இரண்டு மாதங்கள் களஞ்சியப்படுத்தி வைக்க முடியும்

- கொய்யாவின் வேர் முடிச்சுக்கள் நெமடோடா கட்டுப்பாட்டிற்காக வட்டப்புழுக் கொல்லியாக கொள்கலன் ஒன்றிற்கு ப்ளுஓபிரேம் 400/lsc2 மில்லி லீற்றர்களை 250 மில்லி லீற்றர் நீர் எனும் சதவிகிதத்திற்கு கரைத்து பயன்படுத்துதல் வெற்றிகரமான பாவனை ஒன்று என அடையாளம் காணப்பட்டது.

- மங்குஸ்தான் பழங்களுக்குள் எறும்புகள் உட்செல்வதனைத் தடுக்கும் வெற்றிகரமான வழிமுறை ஒன்றாக டைசினொன் 500g/l EC லீற்றர் ஒன்றிற்கு 10 மில்லி லீற்றர் சதவிகிதத்தில் அல்லது இம்டெக்லோபிரிட் 200g/lSL லீற்றர் ஒன்றிற்கு 1 மில்லி லீற்றர் சதவிகிதத்தில் தயாரிக்கப்பட்ட கரைசல் ஒன்றில் அமிழ்த்தப்பட்ட பருத்தித் துணி ஒன்றினைப் பயன்படுத்தி தண்டினைக் கவசமிடல் (1 மீற்றர்) அடையாளம் காணப்பட்டது.

- விவசாயத்திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட இரசாயன உரங்களுடன் அமோனியம் சல்பேற்றினை இலை உரம் ஒன்றாகப் பயன்படுத்துவதன் மூலம் ரம்புட்டானின் நிறை அதிகரித்ததுடன் அறுவடையும் 5% இனால் அதிகரித்தது.

- வர்த்தக ரீதியாக வாழையின் இழைய வளர்ப்பு செய்யப்பட்ட கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக "மில்லேவ சுவந்தெல்" எனும் பெயரினைக் கொண்ட வாழை வகைக்கு உரிய வகையில் இழைய வளர்ப்பு நடைமுறை ஒழுங்கு (Protocol) ஒன்று கட்டியெழுப்பப்பட்டது.

- வாழை மரங்களுக்குரிய இழைய வளர்ப்பு செய்யப்பட்ட நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பழங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் வாழையின் தாய்த்தாவரத் தோட்டம் தாபிக்கப்பட்டதுடன் கிட்டத்தட்ட 5,500 கன்றுகள் விவசாயிகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இயற்கை வள முகாமைத்துவம்

- கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் (163 மாதிரிகள்) இந்த ஆண்டில் (655 மாதிரிகள்) மண் மாதிரிகளின் பகுப்பாய்வுக் கொள்ளளவு நான்கு மடங்கு வரை இரசாயனகூட வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.
- விவசாயக் - காலநிலை ஆலோசனை வழங்களின் தரத்தினை விருத்தி செய்யும் போது திணைக்களத்தின் உள்ளிருந்தும் மற்றும் வெளியில் இருந்தும் நிபுணத்துவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
- மகாவலி – வளவை வலயத்தின் 10 ஏக்கர் அளவிலான 5 பண்ணைகளுக்காக நுண்நீர்த் தொழில்நுட்பக் கட்டமைப்பினைத் திட்டமிடுவதற்காக தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.
- மத்திய மாகாணத்தின் விவசாயத் திணைக்களத்தின் கீழ் 60 விவசாயிகளுக்கு பாதுகாப்பான இல்லங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களைத் தயாரிப்பதற்காக தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.
- "மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பக் கோவை" எனப்படும் நூலினைத் தயாரித்து பிரசுரிக்கப்பட்டது.
- "எதிர்காலப் பரம்பரைக்கும் பயன்பாட்டிற்கு இடமளித்து நீர் வளத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவோம்" என்ற பெயரில் நிலையான நீர் முகாமைத்துவம் தொடர்பான கைநூல் ஒன்று வெளியிடப்பட்டது.

சமூகப் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் திட்டமிடல்

- 2021 ஆம் ஆண்டில் 2020/21 பெரும் போகத்திற்கான பயிர்ச்செய்கைச் செலவுக்காக களத்தரவுகளைச் சேகரித்தல் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கொவிட் – 19 தொற்றுநோய் காரணமாக கள நிகழ்ச்சித் திட்டம் தாமதமாகியது. 2021 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட உணவுப் பயிர்ச் செய்கைச் செலவிற்குரிய மாகாணங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் 2021 ஆண்டின் சிறு போகத்திற்காக ஆரம்பத் தரவுகளைச் சேகரித்தல் திட்டமிடப்பட்டது.
- பின் 2020/21 பெரும்போகம், 2021 சிறுபோகம் மற்றும் 2021/22 முன் பெரும்போகம் என்பவற்றினைத் தழுவும் வகையில் 2021 ஆம் ஆண்டிற்குள் 10 பயிர் எதிர்வுகூறல் அறிக்கைகள் (போகத்திற்கு 5 வீதம்) தயாரிக்கப்பட்டன.
- கள மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை வினைத்திறன் மிகு தரவு கொண்டு செல்லல் வழிமுறை ஒன்றினை உறுதிபடுத்தி "பயிர் எதிர்வுகூறல் தரவுக் கட்டமைப்பு -Croplook, net" மென்பொருளினை விருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட்டது.
- தரவுகளை உள்ளடக்கும் பதவியணியினை நிருவகித்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றிற்காக நிருவாகக் கட்டமைப்பு (பெனல்) வசதி ஒன்று கட்டியெழுப்பப்பட்டதுடன் வர்க்க ரீதியாக காய்கறி பயிர்களின் உற்பத்தி தொடர்பாக பதிவுகள் உள்ளடக்கப்படுவதற்கு வசதி ஒன்று அமைக்கப்பட்டது. மேலும் மேலதிக உணவுப் பயிர்களுக்காக மாவட்ட ரீதியில் வகை சார் விரிவாக்கல் அறிக்கை ஒன்று புதிதாக உள்ளடக்கப்பட்டு உள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான தரவுகள் உள்ளடக்கிய AgStst XVIII தொகுதி தயாரிக்கப்பட்டது.
- பயிர் தொழில்முயற்சி வரவுசெலவுத் திட்டம் – 2020 என்ற பெயரில் நெல், மேலதிக உணவுப் பயிர்கள் மற்றும் காய்கறிகள் என்பவற்றிற்கான தரவுகள் உள்ளடங்கிய வெளியீடுகள் அச்சுப்பதிப்பு செய்து நிகழ்நிலை முறையின் ஊடாக வெளியிடப்பட்டன.

விரிவாக்கல் மற்றும் பயிற்சி

"சௌபாக்யா" பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,

- நாடு பூராகவும் 328,332 ஹெக்ரயார்களுக்காக மேலதிக உணவுப் பயிர்களுக்குரிய விதைகளுக்காக மானியம் வழங்கப்பட்டது.
- நெற் செய்கைக் கருத்திட்டத்தின் கீழ் சூழலுக்கு சாதகமான விவசாயத்தினைப் பின்பற்றுவதற்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர். விஷேடமாக சேதன உரப்பாவனை, மண்ணிற்கு நைதரசனினை வழங்குவதற்காக 'எஸொல்லோ' பாவனை மற்றும் ஆழமாக உழுதல் என்பன ஊக்குவிக்கப்பட்டன. மேலும் இயந்திரமயமாக்கத்தினை மேம்படுத்துவதற்காக 341 ஹெக்ரயார் காணித்துண்டுகளை இணைத்தல் மேற்கொள்ளப்பட்டது. 341 ஹெக்ரயார்களை தாபித்து பெரசூட் முறை மேம்படுத்தப்பட்டதுடன் அதற்காக 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் 79,000 பெரசூட் தட்டுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- உழுந்து, பயறு, கௌபி ஆகிய தாவரங்களின் விளைதிறனினை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்தல் என்பவற்றிற்காக கூடுதலான அறுவடைத் தொழில்நுட்பப் பகேஜினைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு விதைகளுக்காக மானியங்களை வழங்குதல், மானியங்களை வழங்குதல், பயிர்ச் செய்கைகளை

வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக சூரிய சக்தியினால் இயங்கும் 3,126 மின் சக்தி வழங்கிகள் இலவசமாக விவசாய அமைப்புக்களுக்கு வழங்குதல், விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பவற்றிற்காக மானியங்களை வழங்குதல், இயந்திரமயமாக்கலுக்காக இயந்திரங்களை வழங்குதல் மற்றும் 3,126 தார்த் துணிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

- மூன்றாவது போகத்திற்காக 25,500 ஹெக்டயார் பயறு வெற்றிகரமான முறையில் பயிரிடப்பட்டதுடன் அதன்காரணமாக ஆண்டின் நான்காவது காலாண்டில் "பயறு விலை குறைந்து செல்வது அவதானிக்கப்பட்டது.

- இலங்கையில் காய்ந்த மிளகாய் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் மிளகாயினை உலர்த்தும் 50 இயந்திரங்கள் இலவசமாக விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் விசிறும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் வழங்கப்பட்டதுடன் உலர்த்துவதற்காக 2000 தார்ப்பாய்கள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

- மிளகாய் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக கலப்பின விதைகளைப் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதற்கு விதை மானியம் வழங்கப்பட்டதுடன் MICH – HY – 1 கலப்பின வகை விதைகளின் உற்பத்தி விவசாயப் பிரதேசத்தில் முழுமையான இயந்திர பொலி வீடுகளில் மேற்கொள்ளப்பட்டது.

- விரிவாக்கல் முகாம்கள், ஊடாக நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 2020/21 பெரும்போகத்தில் பெரமோன் பொறிகளின் ஊடாக செயற்பாட்டுப் பொறிமுறை ஒன்றினைத் தாபித்தல் என்ற வகையில் நாடு பூராகவும் களப்பிரதேசத்தில் சோளப் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் படைப்புழுக்களின் சேதம் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

- கலப்பின சோள விதை உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் வடக்குப் பிரதேசத்தில் விஷேடமாக இராணுவப் படையின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

- விஷேடமாக கௌபி மற்றும் உழுந்து பயிர்ச்செய்கைக்காக பயிர்ச் செய்கைப் பிரதேசங்களில் வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சூரிய சக்தியினால் இயங்கும் மின் உபகரணம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.

- வர்த்தக மட்டத்திலான பழக் கொத்துக் கிராமங்களை உருவாக்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட காய்கறி வகைகளின் கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் பழச் செய்கையின்போது தேவையான உபகரணங்கள் 50% விவசாயிகளின் பங்களிப்புடன் வழங்கப்பட்டது.

- மாத்தளை அலுவிகாரை மற்றும் அநுராதபுர சிறீ மகா போதிய எனும் மத நிலையங்களின் இரண்டு ஹெல பொஜ்ஜன் நிலையங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளன.

இதற்கு மேலதிகமாக,

- கொவிட் 19 தொற்றுநோய் நிலவும் போதும் 2021 சிறுபோகம் மற்றும் 2020/2021 பெரும்போகத்தில் இரண்டு விவசாய உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- பாரம்பரிய விவசாயக் கைத்தொழிலில் இருந்து சேதன விவசாயக் கைத்தொழில் வரை மாற்றமடைவதற்கு மாகாணங்கள், மாகாணங்களுக்கு இடைப்பட்ட பிரதேசங்கள், மகாவலி வலயங்கள் அல்லது ஏனைய தரப்பினர்கள் மாகாணங்களுக்கு இடையில் சிறந்த ஒத்துழைப்பினைப் பேணிவருவதற்கு 2021 சிறு போகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. சேதன விவசாய கைத்தொழிலுக்காக மாகாண, மாகாணங்களுக்கிடைப்பட்ட மற்றும் மகாவலி உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுவிப்பாளர்கள் பயிற்றுவிக்கும் (TOT) பத்து நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- நாற்றுமேடை முகாமைத்துவம், காளான் உற்பத்தி, தேன் பாணி உற்பத்தி மற்றும் உணவுத் தயாரிப்புக்கள் தொடர்பான சிற்றளவு விவசாய தொழில்முயற்சியாளர்களுக்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்று என்பன நடைமுறைப்பட்டுத்தப்பட்டன.

- விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் (NVQ 5) தேசிய டிப்ளோமாவிற்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை அநுராதபுரம், பிபிளை, வாரியபொல, லபுவ பரந்தன் மற்றும் பாலமுனை ஆகிய விவசாயக் கல்லூரிகளில் நடாத்தப்பட்டன.

- 2021 ஆம் ஆண்டில் NVQ 06 கல்லூரிகளில் 787 மாணவர்கள் விவசாய உற்பத்தித் தொழிநுட்ப உயர் தேசிய டிப்ளோமாப் பாடநெறியினையும், NVQ 5 கல்லூரிகளில் 258 மாணவர்கள் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பத் தேசிய டிப்ளோமாப் பாடநெறியினையும் கற்றனர்.

- 2021 ஆம் ஆண்டில் 206 மாணவர்கள் விவசாய உற்பத்தித் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமாப் பாடநெறியினையும் (NVQ 06) 114 மாணவர்கள் விவசாய உற்பத்தித் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமாப் பாடநெறியினையும் (NVQ 5) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தனர்.

- சிறந்த விவசாய வழிமுறைகள்(GAP) தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டல், விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் உட்பட 80 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதுடன் SL-GAP பண்ணைகள் 545 ஆண்டிற்குள் உறுதிபடுத்தப்பட்டன.
- சாக் (SAARC) அபிவிருத்தி நிதியத்தின் நிதி உதவியினைப் பெற்றுக்கொண்டு "பெறுமதித் தொடர் தொடர்பில் கவனம் செலுத்தி சிற்றளவிலான விவசாய வியாபாரங்களின் ஊடாக SAARC வலயங்களின் சிறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல்" தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. உள்நாட்டு உணவுப் பயிர்களை (பிரதேசத்திற்கு விஷேடமான) தயாரிப்பதற்காக அநுராதபுரம் மற்றும் மொனராகலை பிரதேசங்களில் செயற்பாட்டு நிலையங்கள் இரண்டு தாபிக்கப்பட்டன.

விவசாயத் தகவல் தொடர்பாடல் மற்றும் தொடர்பாடல்

- விவசாய கமூகம் மற்றும் உரிய ஏனைய தரப்பினர்களுக்கு நவீன விவசாயத் தொழில்நுட்பத்தினைப் பகிர்ந்தளிப்பதற்காக 161 தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களும் 277 விஷேட வீடியோ நிகழ்ச்சித் திட்டங்களும் 25 குறு வீடியோச் செய்திகளும் ஆண்டிற்குள் ஒளிபரப்பப்பட்டதுடன் 256 யூரியூப் குறு வீடியோ நாடகங்களும் இணையத்தளத்திற்குள் உள்ளடக்கப்பட்டன.
- விவசாயத்துடன் தொடர்பான விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக 1676 வானொலி நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் 480 குறுஞ் செய்திகளும் ஆண்டிற்குள் ஒளிபரப்பப்பட்டன.
- விவசாயம் தொடர்பாக 70 புதுப் புத்தகங்களும் (122,191 பிரதிகள்) 45 பத்திரங்களும் (1,826,128 பிரதிகள்) துண்டுப்பிரசுரங்கள் 51,430 பிரதிகளும் பூர்த்தி செய்து பகிர்ந்தளிக்கப்பட்டன.
- 346 புதுப் பக்கங்கள் சமூக வலைத் தளங்களுக்குள் சேர்க்கப்பட்டன.
- விவசாயத் திணைக்களத்திற்காக பயன்படுத்துவதற்கு இலகுவான புதிய இணையத் தளம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதுடன் அதன் 118 பக்கங்கள் இற்றைப்படுத்தப்பட்டன.
- 4.25 மில்லியன் ரூபா வருமானம் ஒன்றினைப் பதிவு செய்து கன்னோருவ மற்றும் படஅத விவசாயத் தோட்டத்தினைப் பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை 34,316 ஆகக் காணப்பட்டது.
- விவசாயம் சார் வெளியீடுகளினால் ஈட்டப்பட்ட வருமானம் 2.21 மில்லியன் ரூபாவாகும்.
- மண் பரிசோதனை அறிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பின் 1 வது படிமுறை பீடைகொல்லிகளைப் பதிவு செய்தல், விதை சந்தைக் கட்டமைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவத் தரவுகள் கட்டமைப்பு என்பன பூர்த்தி செய்யப்பட்டன. நிதி சார் தரவுகள் கட்டமைப்பு, தாவரப் பிறப்புரிமையியல் வளங்கள் MIS – 1 ஆவது படிமுறை மண் பரிசோதனை அறிக்கை முகாமைத்துவ வழிமுறையின் தரவுக் கட்டமைப்பு என்பவற்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- விவசாயம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுள் 73,718 பிரச்சினைகளுக்கு 1920 விவசாய போதனாசிரியர்களின் ஆலோசனைச் சேவைகள் ஊடாக பதில்கள் வழங்கப்பட்டுள்ளன
- விவசாயஉற்பத்திதொடர்பானவிஷேடஊடகபிரச்சாரம்ஒன்று32 தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள், 5 தொலைக்காட்சிக் குறுஞ்செய்திகள், வர்த்தக விளம்பரம் ஒன்று, என்பவற்றின் ஊடாகவும் ,LED பெனல்ஊடாகநாளாந்தம்குறுஞ்செய்திகளைவெளியிட்டும் அவ்வாறே சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் 1,212,000 பத்திரங்கள் மற்றும் 28,350 துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றை வெளியிட்டும் மேற்கொள்ளப்பட்டது. வாராந்தம் 35 வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் 34 விவசாய ரீவி யூ ரியுப் குறு வீடியோ நாடாக்கள் கொப்போஸ்ட் தயாரிப்பு தொடர்பாக எழுதப்பட்ட புத்தங்களின் 30,800 பிரதிகள், 46 பத்திரிகைக் கடிதங்கள் என்பனவும் வெளியிடப்பட்டதுடன் அறிவினை விருத்தி செய்து 8 நிகழ்நிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தியும் சமூக ஊடக அறிவித்தல்கள் மற்றும் 148 வீடியோ நாடாக்கள் என்பனவும் வெளியிடுதல் மேற்கொள்ளப்பட்டது.

விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி

- பதிவு செய்யப்பட்ட விதை நெல் கிட்டத்தட்ட 150,013 பூசல்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- உறுதிப்படுத்தப்பட்ட விதை நெல் கிட்டத்தட்ட 56,552 பூசல்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- மொத்தமாக விதை நெல் 185,233 பூசல்கள் விற்பனை செய்யப்பட்டன.
- மேலதிக உணவுப் பயிர்களின் பல்வேறு வகையான விதைகளில் கிட்டத்தட்ட 348 தொன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- சோள விதை 92,159 கிலோகிராம், மரமுந்திரிகை விதை 248,655 கிலோகிராம்,, சோயா போஞ்சி 115,314 கிலோகிராம்,பயறு விதை 401,663 கிலோகிராம் மற்றும் கௌபி விதை கிட்டத்தட்ட 85,501 கிலோகிராம் என்பன உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டன.

- ஆரம்ப காய்கறி விதை 1,560 கிலோகிராம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட காய்கறி விதை கிட்டத்தட்ட 19,300 கிலோகிராம், என்பன உற்பத்தி செய்யப்பட்டன.

- உருளைக்கிழங்கு ஆரம்ப விதை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை என்பன 1,079 தொன் மற்றும் கிரனோலா வகை நுண் கிழங்குகள் கிட்டத்தட்ட 2,477,800 உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டன.

- கிட்டத்தட்ட 1,170,397 பழக் கன்றுகள் (ஒட்டற் கன்றுகள் 592,687 உட்பட) உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டன.

- விவசாய அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 25 இலட்சம் வீட்டுத் தோட்டப் பொதிகள் தயாரித்து கமத்தொழில் அமைச்சு, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், மகாவலி அதிகாரசபை மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் என்பவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு

- விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் பெயரிடப்பட்ட குழு ஒன்றினூடாக விதைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு கமத் தொழில் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- ISO17065 சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய சிறந்த விவசாயப் பழக்கவழக்கங்களை (GAP) அத்தாட்சிப்படுத்துவதற்காக சகல அத்தாட்சிப்படுத்தல் வழிமுறை தயாரிக்கப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டில் தரத்தினை உறுதிப்படுத்திய விதை நெல் உற்பத்திக்காக 7,776 ஹெக்ரயார்கள் அரச, ஒப்பந்த மற்றும் தனியார் பிரிவுகளிலிருந்து பதிவு செய்யப்பட்டதுடன் இவற்றுள் 79% இற்கான பங்களிப்பினை வழங்கியது தனியார் துறையாகும். தரமான அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேற்படி துறைகளிலிருந்து விதை நெல் 16,685 மெட்ரிக் தொன் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவற்றுள் 13,976 மெட்ரிக் தொன் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுக்கு ஒத்தியங்குகின்றது என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தரத்தினை உறுதிப்படுத்திய மேலதிக உணவுப் பயிர்களின் விதை உற்பத்திக்காக 1,955 ஹெக்ரயார்கள் பதிவு செய்யப்பட்டதுடன், அதற்காக அமய அடிப்படையிலான விவசாயிகளின் பங்களிப்பு 92% ஆகக் காணப்பட்டது. சோளம், பயறு, மரமுந்திரிகை, எள்ளு, கௌபி, குரக்கன், உழுந்து, கொள்ளு மற்றும் சோயா போஞ்சி என்பன மேற்படி விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரித்தாகியதுடன், 1,136 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இவற்றுள் 94% ஆன அளவு விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுக்கு ஒத்தியங்குகின்றது என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தரத்தினை உறுதிப்படுத்திய காய்கறி விதை உற்பத்திக்காக 321 ஹெக்டயார் விஸ்தீரணமான பிரதேசம் பதிவு செய்யப்பட்டதுடன் இதற்காக அரச மற்றும் ஒப்பந்தப் பிரிவுகளின் பங்களிப்பு 82% ஆகும். இதனூடாக காய்கறி விதை 41 மொற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டதுடன் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுடன் ஒத்தியங்கும் 38 மெற்றிக்தொன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டிற்கான தரத்தினை உறுதிப்படுத்திய கிரனோலா வகை உருளைக்கிழங்கு விதைகளை உற்பத்தி செய்வதற்காக 109.2 ஹெக்டயார்கள் பதிவு செய்யப்பட்டதுடன் இவற்றுள் 1,159 மெற்றிக்தொன்கள் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுக்கு ஒத்தியங்குகின்றது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பான வீடு ஒன்றின் கீழ் பயிரிடப்பட்ட விதை உருளைக்கிழங்கு 46 மெற்றிக்தொன்கள் மற்றும் ஆரம்ப வகுப்பின் சிறு தண்டுக் கிழங்குகள் 3,278,051 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுக்கு ஒத்தியங்குகின்றது என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பேராதெனிய, அலுத்தரம, படஅத, மஹாஇலுப்பல்லம மற்றும் பரந்தன் ஆகிய விதை ஆய்வு கூடங்களின் ஊடாக 14,351 மாதிரிகளின் தரத்தினை உறுத்திப்படுத்துவதற்காக பரிசோதிக்கப்பட்டது. அவ்வாறே விதை சுகாதார ஆய்வுகூடத்தின் மூலம் பரவும் நோய்க் காரணிகளை உறுதிப்படுத்துவதற்காக 804 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

- விவசாயத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒட்டு பழக்கன்றுகளை உற்பத்தி செய்யும் அரச மற்றும் தனியார் துறையில் 339 நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றின் நடவடிக்கைகள் கண்காணிப்பு செய்யப்பட்டுள்ளன. ஒட்டுப் பழக்கன்றுகள் 1,356,174 இற்கான தரத்தினை உறுதிப்படுத்தி அத்தாட்சி லேபல்கள் இடப்பட்டுள்ளன. அவ்வாறே ஒட்டுக்கன்றுகளைஉற்பத்திசெய்வதற்காக674 தாய்த்தாவரங்களும் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுக்கு ஒத்தியங்கும் வகையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள், தாபன ரீதியான விதைகள் மற்றும் உருளைக்கிழங்கு விதைகள் மற்றும் சந்தையின் ஊடாக எழுமாறியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விதை மாதிரிகள் 1,303 இற்கான பின் கட்டுப்பாட்டுக் களப் பரிசோதனைகளை மேற்கொண்டு தரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- புதிய வர்க்கங்களை விடுவிக்கும் போது புதியதொரு வர்க்கமாக உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சிறப்பியல்பு, ஒருமைப்பாடு மற்றும் நிலைபேற்றுத்தன்மை (DUS)பரிசோதனைகள், எதிர்பார்க்கப்படும்நெல் வர்க்கங்களுக்காக 3 உம், காய்கறிகளுக்காக 27 உம், மேலதிக உணவுப் பயிர்களுக்காக 8 உம், பழங்களுக்காக 65 உம் என்ற வகையில் மேற்கொள்ளப்பட்டன.

- 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதை மற்றும் நடுகைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் விதைகளைக் கையாளுபவர்கள் 1,185 பேர் பதிவு செய்யப்பட்டதுடன் 955 பேரின் பதிவினைப் புதுப்பித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

- சிறந்த விவசாயப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றும் பண்ணைகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக 635 பண்ணைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றுள் 561 பண்ணைகள் சிறந்த விவசாயப் பண்ணைகள் என அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

- நெற்செய்கையின் பிரதான பீடைகளுக்குரிய பீடைக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், நெற் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதான ஏழு மாவட்டங்களில் முன்னோடிக் கருத்திட்டம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டது.

- சோளப் பயிர்ச் செய்கையின் படைப்புழுக் கட்டுப்பாட்டிற்கு விவசாயத் திணைக்களத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டு உள்ள சூழலுக்கு சாதகமான கட்டுப்பாட்டு முறை விவசாயிகளுக்கு மத்தியில் பிரபல்யம் செய்யப்பட்டது.

- மிகவும் விளைத்திறன் மிக்க சேவை ஒன்றிற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தாவரத் தடுப்புக்காப்பு நிலையத்திற்காக மத்திய அரசின் நிதியுதவியின் கீழ் கட்டிடம் ஒன்றினை நிர்மாணித்து உட்பிரவேச தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மிகவும் விரிவான முறையில் மேற்கொண்டு வருவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

- கொழும்பு துறைமுக உட்பிரவேச தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மிகவும் விரிவான வகையில் நிறைவேற்றுவதற்காக புதிய கட்டிடம் ஒன்று கொரியா நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டது.

- தாவரங்கள் மற்றும் தாவரம் சார் பொருட்களை தபால் மூலம் பரிமாற்றிக் கொள்ளும் போது ஏற்படக்கூடிய பீடைகளின் ஆபத்தினைக் குறைத்துக் கொள்வதற்காக கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தில் தாவரத் தடுப்புக்காப்பு அலகு ஒன்று தாபிக்கப்பட்டது.

- மா மற்றும் அன்னாசித் தாவரங்களுக்கு ஜோர்தான தாவரப் பாதுகாப்பு அமைப்பின் மூலம் விதிக்கப்பட்டிருந்த தாவரத் தடுப்புக்காப்புத் தடையினை நீக்கிக்கொள்வதற்கான இருதரப்புத் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து மா மற்றும் அன்னாசி ஜோர்தானிற்கு ஏற்றுமதி செய்வதற்காக வர்த்தக தடைகளை நீக்கி சர்வதேச வர்த்தகத்திற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

- ஐரோப்பிய சங்கத்தின் 27 நாடுகளுக்கு தடுப்புக்காப்புநோய்க்கிருமி ஒன்றாகிய ஸைலெல்லா பாஸ்ரிடியோசா(*Xylellafastidiosa*) பரவலன் தாவர ஏற்றுமதிக்காக விதந்துரைக்கப்பட்டு இருந்த தடையினை நீக்கிக் கொள்வதற்கு உரிய ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- சர்வதேச தாவரப்பாதுகாப்பு அமைப்பின் தலைமையில் தயாரிக்கப்படும் சர்வதேச தாவர தூய்மைப்படுத்தல் சமவாய இலக்கம் 15 இன் கீழ் சல்பியூரைல் புளோரைட்டு *(Sulfuryl fluoride)*பலகையினாலான பொருட்களைப் பொதி செய்யும் பொருள் சிகிச்சையினை மேற்கொள்வதற்காக பயன்படுத்தல் தொடர்பான தொழில்நுட்பக் குழுவின் உறுப்புரிமைக்காக தேசிய தாவர தடுப்புக்காப்புசேவையின் மேலதிக பணிப்பாளர் தெரிவு செய்யப்பட்டார்.

- இலங்கையில் சேதன விவசாயத்திற்கு அத்தியாவசியமான தாவரப் போசணைகளை இறக்குமதி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தாவரத் தடுப்புக்காப்புப்பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

- தாவரங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை வினைத்தினுடன் மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும் பேணி வருவதற்காக இலங்கை சுங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ASYCUDA கட்டமைப்புடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

- உயிரியல் பாகாப்புக் கருத்திட்டத்தின் ஊடாக உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு புதிய ஆய்வுகூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

தாவர மரபணு வள முகாமைத்துவம்

- களப்பகுப்பாய்வு செயற்பாடுகளின் மூலம் பயிர்களின் 246 மரபணு பிளாஸ்மா மற்றும் அவற்றின் வனக்குறிகாட்டிகள் என்பன ஒட்டு மொத்தமாக சேகரிக்கப்பட்டதுடன் 82 வகையான தாவரங்கள் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு பயிர்களின் 27 மரபணு பிளாஸ்மாக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டில் 244 புதிய வகைகள் மரபணு வங்கியில் பாதுகாக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக பல்பெருக்கம் செய்யப்பட்ட 393 வகைகள் பாதுகாக்கப்பட்டன. தாவர மரபணு வள நிலையத்தின் மரபணு வங்கியியல் தற்போதாகும் போது பயிர்களின் மரபணு பிளாஸ்மா 16,497 பாதுகாக்கப்பட்டு உள்ளதுடன், வற்றாளை, உருளைக்கிழங்கு, டயஸ்கோரியா (*Dioscorea*), கிழங்கு மற்றும் வாழை உட்பட 384 மாதிரிகள் உடலிற்கு வெளியே பாதுகாப்பதற்கு உட்படுத்தப்பட்டது.
- மரபணு பிளாஸ்மாவினைப் பயன்படுத்துவதற்கான கோரிக்கையின் அடிப்படையில் விவசாயிகள், ஆராய்ச்சி நிலையங்கள், தனியார் கம்பனிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றிற்கு இடையில் பல்வேறு தாவர இனங்களின் மாதிரிகள் 338 பகிர்ந்தளிக்கப்பட்டன.
- பயிர்களின் 706 மரபணு பிளாஸ்மா மாதிரிகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு பாதுகாப்பதற்காக அனுப்பப்பட்டது. பாதுகாக்கப்பட்ட 101 வெண்டிக்காய் மாதிரிகள் 77 பயற்றை மாதிரிகள் மற்றும் 33 கெக்கரி மாதிரிகள் என்பன உருவவியல் விஞ்ஞானப் பண்புகளைப் பயன்படுத்தி வகைப்படுத்தப்பட்டன.
- தெரிவு செய்யப்பட்ட இனங்களுக்கு உரிய வனப் பயிர் குறிகாட்டிகளின் மூலக்கூற்று வகைப்பாடு மற்றும் அடையாளம் காணப்படாத மரபணு பிளாஸ்மாக்களின் *DNA* குறியிடல் என்பன பூர்த்தி செய்யப்பட்டன. பரிந்துரைக்கப்பட்ட கலப்பின வகைகளின் மரபணு சார் தூய்மையினைப் பரிசோதிப்பதற்காக நடைமுறை ஒழுங்கு ஒன்று கட்டியெழுப்பப்பட்டதுடன் ஹீனட்டி மற்றும் மா நெல் எனும் பாரம்பரிய நெல் இனங்கள் மூலக்கூற்று மற்றும் உருவவியல் குறிகாட்டிகளுடனும் ஹொண்டாரவாலு நெல் மாதிரிகள் 21, உருவவியல் குறிகாட்டிகளுடனும் வகைப்படுத்தப்பட்டன. ஏனைய 29 பாரம்பரிய நெல் இனங்கள் கபிலத் தாவரத் தத்திக்கு எதிர்விளைவினைக் காட்டும் மாதிரிகளை அடையாளம் காண்பதற்கு மூலக்கூற்று ரீதியில் வகைப்படுத்தப்பட்டன.
- தற்கொலை செய்தலைத் தடுக்கும் தேசிய கொள்கைகள் செயலாற்றுகைத் திட்டத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான எதிர்கால கொள்கைகளுக்கான விஷேட விருது பீடைகளைப் பதிவு செய்யும் அலுவலகத்தினால் வெற்றிகொள்ளப்பட்டது.

சவால்கள்

- காய்கறிகள் மற்றும் பழங்களின் பின் அறுவடைச் சேதத்தினைக் குறைத்துக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப நடவடிக்கைகளை வழங்கும் செயற்பாட்டுத் தொடரினுள் செயற்படாமை.
- சந்தையில் தரம் குறைந்த சேதனப் பசளைகள் காணப்படல்.
- சேதனப் பசளை உற்பத்தியின் போது நடைபெறும் முறைகேடுகள்
- நோய்கள் அல்லது பீடைகளைக் கட்டுப்படுத்தும் போது இரசாயன முறைகளுக்குப் பதிலாக கவர்ச்சியான சூழலுக்கு சாதகமான உபாய மார்க்கங்களை விருத்தி செய்தல்.
- பயிர்களின் விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களின் போது பயன்படுத்துவதற்கான மரபணு பிளாஸ்மாக்கள் போதியதாக இல்லாமை.
- சர்வதேச விஞ்ஞான சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு உள்ள வாய்ப்புக்கள் குறைவடைதல்.
- 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை விவசாய சேவையின் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித் துறையில் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள முடியாமையின் காரணமாக நிலவும் உத்தியோகத்தர் பற்றாக்குறை.
- அரசின் புதிய கொள்கை, பசுமை விவசாயத்துடன் முன்னேறிச் செல்வதற்கான விவசாய இரசாயனப் பொருட்கள் இன்றி நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்பத்திற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. விஷேடமாக களை கொல்லிகள் மற்றும் பூச்சிகொல்லிகள் என்பவற்றிற்கான தேசிய நுட்பமுறைகளை கையாண்டு ஒத்திகை பார்த்தல், புதிய தொழிநுட்பங்களைத் தோற்றுவித்தல் என்பன மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அதற்காக ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் குறைபாடு ஒன்று தற்போதாகும் போது நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் நிலவுகின்றது.

- பசுமை விவசாயம் பற்றிய அரசின் புதிய கொள்கை தொடர்பான ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்துதல் மற்றும் குறுகிய காலத்திற்குள் பசுமை விவசாயத் தொழில்நுட்பத்தினைத் தோற்றுவித்தல்.

- கொரோனா தொற்றுநோய் பரவல் நிலைமை விதை அத்தாட்சிப்படுத்தல் நடவடிக்கைகளில் பாரிய தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தியது. மேற்படி நிலைமையின் கீழ் விவசாய பிரதேசங்களை அவதானித்தல் மற்றும் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றிற்காக செல்வதற்கு தடை ஏற்பட்டதுடன் அதன் பெறுபேறு ஒன்றாக அதிகூடிய களப்பிரதேசங்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்ட போதிலும் லேபல் செய்யப்பட்ட விதைகளின் இருப்பின் அளவில் குறைவு ஏற்பட்டது. அதற்கு மேலதிகமாக உரப் பற்றாக்குறை, விவசாயிகளுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டமை களைப்பயிர்களைக்கட்டுப்படுத்துவதற்கு தேவையான இரசாயனப் பொருட்களின் பற்றாக்குறை என்பன காரணமாக பெரும்பாலான கள விதைகள் அத்தாட்சிப்படுத்தல் நியமங்களுக்கு ஒத்தியங்கவில்லை.

- பயணத்தடை விதிக்கப்பட்ட காலப்பகுதியில் விதை மற்றும் நடுகைப் பொருட்களுக்கு கூடிய கேள்வி நிலவியதுடன் மேற்படி உடனடிக் கேள்வியின் காரணமாக பெரும்பாலான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் தரத்தினை உறுதிப்படுத்தாமல் விவசாயிகளினால் சந்தைக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- நிதி ஒதுக்கீடு போதியதாக இல்லாமை சகல விதை அத்தாட்சிப்படுத்தல் நடவடிக்கைகளும் பின்னடைவதற்குக் காரணமாக அமைந்தது.

- இறக்குமதி செய்யப்பட்ட நாட்டின் நிபந்தனைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் தேசிய தாவரத் தனிமைப்படுத்தல் சேவையின் ஊடாக வழங்கப்பட்ட தாவர தூய்மைப்படுத்தல் சான்றிதழ்களின் தரத்தினை விருத்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு போதிய வசதிகள் இல்லாமை.

- காய்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான அத்தாட்சிப்படுத்தப்பட்ட களங்கள் போதியதாக இல்லாமை.

- களப்பிரதேசங்களில் சட்ட விரோதமான பீடை கொல்லிகள் பாரியளவில் இருப்பதன் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டியிருத்தல்.

- மாகாண சபைகளில் உள்ள சில உத்தியோகத்தர்கள் மத்திய அரசின் செயற்பாடுகள் தொடர்பில் காட்டும் குறைவான முன்னுரிமை காரணமாக சில பிரதேசங்களில் பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை அமுல்படுத்தும்போது பிரச்சினைகள் ஏற்படல்.

- நிகழ்நிலைப் பயிற்சிக்காக சில பிரதேசங்களில் வசதிகள் காணப்படாமை காரணமாக பயிற்சிச் செயற்பாடுகள் வரையறுக்கப்படல்.

- மாகாண விவசாயத் திணைக்களங்களுக்கு செயற்பாடுகளைப் பகிர்ந்தளிக்கும் போது, மேற்படி பணிகளை மத்திய கமத்தொழில் அமைச்சு மற்றும் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் என்பனவற்றுடன் சில நேரங்களில் எதிர்மறை விளைவினைக் காட்டல் அல்லது முற்றிலும் வேறுபடுதல்.

- விவசாய ஆராய்ச்சியின் புத்தாக்கங்கள் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்படல் பலவீனமடைதல்.

- பொருத்தமற்ற வர்த்தகக் கொள்கைகள் (உதா:- தீர்வை வரி மற்றும் வரிகள் தற்காலிகமாக விதிக்கப்படல்)

- சந்தை தொடர்பான தகவல்கள் பற்றாக்குறை அல்லது போதியதாக இல்லாமை மற்றும் அவற்றுள் உட்பிரவேசிக்க முடியாமை என்பன காரணமாக பல பொருட்களுக்கான பலவீனமான பண்ணை – சந்தை ஒருங்கிணைப்பு ஏற்படல்.

- பேரம் பேசும் அதிகாரத்தினால் வலுவூட்டுவதற்கான நிலையான விவசாய வலையமைப்புக்கள் அல்லது சங்கங்கள் இல்லாமை.

- நிலைபேற்றுத் தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் வகையில் பல்வேறு விவசாயத் துணைப் பிரிவுகள் மற்றும் ஏனைய பிரதான பிரிவுகள் என்பவற்றிற்கு இடையில் வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களுக்கு அதிகூடிய போட்டி ஒன்று நிலவுதல்.

- காணிச்சீரழிவு, விவசாய நிலங்களைத் தவறான முறையில் பகிர்ந்தளித்தல் காணிகள் துண்டாடப்படல் மற்றும் பலவீனமான காணி முகாமைத்துவம் என்பன காரணமாக காணியின் விளைதிறன் குறைவடைதல்.

- கோடை மற்றும் வெள்ளம் காரணமாக நிதமும் ஏற்படும் நட்டங்கள்மற்றும் சேதங்களுடன் காலநிலை மாற்றங்களின் அதிகூடிய ஆபத்து.

- மானிட – விலங்குப் பிரசச்சினைகள்

எதிர்கால இலக்குகள்

- எதிர்கால நெல் விவசாயிகளுக்குப் பொருத்தமான பல்வேறு வயதுப் பிரிவுகளின் கீழ் நெல் இனங்கள் மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களைத் தோற்றுவித்தல் எனும் பிரதான இலக்கிற்கு அமைய, குறைந்த உள்ளீடுகளுடன், நோய் பீடைகளுக்கு தாக்குப் பிடிக்கும், சுற்றாடல் அழுத்தங்களுக்கு தாக்குப்பிடிக்கும் அதிகூடிய தானியப் பண்புகளுடன் கூடிய நெல் வகைகளை உற்பத்தி செய்வதனை இலக்காகக் கொண்ட நெல் இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- இனப்பெருக்கத்தின் மூலம் அதிகூடிய தானியப் பண்புகளுடன் கூடிய நெல் இனங்களை உற்பத்தி செய்தல் மற்றும் அரிசி சார் கைத்தொழில்களுக்குப் பொருத்தமான நெல் இனங்களை உற்பத்தி செய்தல்.
- சகல பயிர்களிலும் மிகவும் சிறந்த தரமான பண்புகளுடன் கூடிய புதிய இனங்களை அறிமுகம் செய்தல் மற்றும் விளைதிறனினை அதிகரித்தல்.
- பசுமை விவசாயத்திற்காக பொருத்தமான தொழில்நுட்பங்களை உருவாக்கி அரச கொள்கைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பாதுகாப்பான உணவு உற்பத்தி ஒன்றினை நோக்கிச் செல்லல். மிகவும் வினைத்திறனான கொம்போஸ்ட் உற்பத்தியின் ஊடாக தாவரப் போசணைகளை தேவையான அளவில் தேவையான வளர்ச்சிப் பருவத்தில் வழங்குவதன் ஊடாக அறுவடைச் சேதங்களை குறைத்துக்கொள்வதற்கான சவால்களை வெற்றிகொள்வதற்குத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- அதிகூடிய அறுவடை ஒன்றினைப் பெற்றுக்கொடுக்கும் உயர் தரத்திலான உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கலப்பின மற்றும் திறந்த கருக்கட்டல் செய்யப்பட்ட காய்கறி வகைகளைப் பயிரிடல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் சகல இடங்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருப்பினை அதிகரித்தல்.
- விருத்தி செய்யப்பட்ட பயிர் வகைகளின் தரமான விதைகள் போதிய அளவில் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.
- நெற்செய்கையின் கள நடவடிக்கைகளை, இயந்திரமயமாக்கலினை ஊக்குவிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை அறிமுகம்செய்தல்.
- பயிர்களில் நோய்கள் மற்றும் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சூழலுக்கு சாதகமான தொழில்நுட்பங்கள் மற்றும் வழிமுறைகள் என்பவற்றினை உருவாக்குதல்.
- உயர் தரத்திலான சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாடு என்பவற்றினை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான தொழில்நுட்பங்களை அடையாளம் காணல்.
- சேதனப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான தொழில்நுட்பப் பகேஜினை வழங்குதல்.
- உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்காக அதிகூடிய தோற்றுவாயினைக் கொண்ட உணவு உற்பத்திகளை அறிமுகம் செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- உயர் தரத்திலான பாதுகாப்பான உணவுப் பயிர்களைப் பெற்றுக்கொள்வதற்கு நுகர்வோருக்கு வாய்ப்பினை வழங்குதல்.
- நிறுவனத்தின் மனித வளக் கொள்ளளவினை விருத்தி செய்தல்.
- பயிர்களின் உற்பத்தியினை இலகுபடுத்துவதற்காக இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் நிலவும் சமூக பொருளாதார மற்றும் கள நிலைமைக்குப் பொருந்தும் விளைதிறன் மிக்க விவசாயப் பொறிமுறைத் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல்.
- தொழில்நுட்பப் புத்தாக்கங்களை விரிவான வகையில் பயன்படுத்துவதற்கு உரிய வசதிகளை வழங்குதல்.
- மண்ணைப் பரிசோதித்து பசளையினைப் பயன்படுத்துதல், சேதனப் பசளைப் பயன்பாட்டின் ஊடாக மண்ணை விருத்தி செய்வதன் ஊடாக அதிகூடிய தாவரப் போசணை முகாமைத்துவம் ஒன்றுடன் கூடிய இலாபகரமான நெற்செய்கையினை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.
- மண்பாதுகாப்பு மற்றும் நீர் முகாமைத்துவம் என்பன தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவங்கள் என்பவற்றினைப் பரிமாறிக்ெகாண்டு பிரதேசத்தின் மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.
- அரசின் புதிய கொள்கைக்கு அமைய பசுமை விவசாயத்திற்கு உகந்த புதிய தொழில்நுட்பங்களைத் தோற்றுவிப்பதன் மூலம் பாதுகாப்பான உணவு உற்பத்தியினை உறுதிப்படுத்தல் மற்றும் வினைத்திறன் மிக்க கொம்போஸ்ட் உற்பத்தியின் ஊடாக சரியான வளர்ச்சிப் பருவத்தில் தேவையான அளவு தாவரப் போசணையினை வழங்குவதன் மூலம் அறுவடைச் சேதங்களைக் குறைத்தல்.

- விதை ஆய்வுகூடத்தின் கீழ் விதைகளின் தரத்தினை மதிப்பீடு செய்தல் தற்போதாகும் போது விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் கீழ் அத்தாட்சிப்படுத்தலுக்கு உட்படாத விதைகளின் தரத்தினை விதை ஆய்வு கூடத்தின் கீழ் பரிசோதித்துக்கொடுத்தல்.

- நெல், மேலதிக உணவுப் பயிர்கள், காய்கறிகள், பழங்கள், என்பவற்றின் விதைகளின் தரத்தினை விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் நியமங்களுக்கு ஒத்தியங்கும் வகையில் களங்களை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் விதைகளை ஆய்வுகூட நிலைமைகளின் கீழ் பரிசோதித்தல், இருப்புக்களைப் பிரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தப்பட்ட இருப்புக்களின் தரத்தினை பரிசோதனைக்கு உட்படுத்தல், இனப்பெருக்க விதை வகைகளின் விதைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல். டீ.யூ.எஸ். பரிசோதனையினை மேற்கொள்ளல், இறக்குமதி செய்யப்பட்ட விதைகளை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்வதற்கு பெயரீடுகளை வழங்குதல், பாதுகாப்பான வீடுகளின் கீழ் பயிர் செய்யப்படும் பயிர்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான நியமங்களைத் தயாரித்தல், காளான் விதைகளை அத்தாட்சிப்படுத்தும் வழிமுறையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் பாரம்பரிய நெல் இனங்களின் விதைகளின் தரத்தினை உறுதிப்படுத்தும் வழிமுறை ஒன்றினைத் தாபித்தல்.

- விதைகள் சட்டத்திற்கு உரிய செயற்பாடுகளை முகாமை செய்தல் மற்றும் விதைகள் சட்டத்தின் சகல செயற்பாடுகளையும் பெருந்தோட்டப் பயிர்கள், பூக்கள் மற்றும் ஏற்றுமதிப் பயிர்கள் என்பவற்றிற்காகவும் விரிவாக்கம் செய்தல்.

- தரமான விதை உற்பத்தி மற்றும் தரச் சான்றிதழ் என்பவற்றிற்குத் தேவையான தொழில்நுட்பங்களைத் தயாரித்தல் மற்றும் விதைகளுக்கான உரிய சகல ஆராய்ச்சிகளையும் நடாத்துதல்.

- விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் நாற்று மேடை உரித்தாளர்கள் உட்பட சகல விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களைச் கையாளுபவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியினை வழங்கல்.

- தரத்தினை உறுதிப்படுத்திய ஒட்டு பழக்கன்றுகளை அத்தாட்சிப்படுத்தல், தாய்த்தாவரங்களை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் அவற்றிற்கு உரிய GPS தரவுகளைப் பெற்றுக்கொண்டு வரைபடத்தில் உள்ளடக்கும் செயன்முறையினை மேலும் விரிவுபடுத்தல்.

- தற்போதாகும் போது விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையில் லேபல் இடாத, விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட இனங்களின் தண்டுக்கன்று, விதைக் கன்று மற்றும் லேயர் கன்று மற்றும் இழைய வளர்ப்புக்கன்று என்பவற்றினை அத்தாட்சிப்படுத்தும் வழிமுறை ஒன்றினைத் தாபித்தல்.

- சிறந்த விவசாயப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றும் பண்ணைகளின் எண்ணிக்கையினை அதிகரித்தல் மற்றும் உருளைக்கிழங்கு, காளான் மற்றும் மேலதிக உணவுப் பயிர்கள் என்பவற்றிற்காக சிறந்த விவசாயப் பாவனைகளுக்குரிய நியமங்களைத் தயாரித்தல்.

- சூழலுக்கு சாதகமான பீடைக் கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல்.

- இலங்கையின் தேசிய தாவர பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்தல்.

- பீடைகளைப் பரிசோதித்தல், எதிர்வு கூறல் மற்றும் தொற்றுநோய் முகாமைத்துவம் தொடர்பான முறையான வழிமுறை ஒன்றினையும் மற்றும் தரவுக் களஞ்சியம் ஒன்றினையும் தாபித்தல்.

- வெளிநாட்டு ஆக்கிரமிப்புத் தாவர வகைகளை உரிய காலத்தில் முகாமை செய்வதற்கான வழிமுறைகளை அடையாளம் காணல்.

- பீடைகளை அடையாளம் காண்பதற்கு சரியான மற்றும் துரித முறைகளை அறிமுகம் செய்தல்.

- பீடைகளின் ஆபத்துக்கள் தொடர்பான விரிவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளல் மற்றும் தணிப்பு என்பவற்றிற்கான விடயங்களை முன்வைப்பதன் ஊடாக சர்வதேச வியாபாரத்திற்கான வசதிகளை வழங்கல்.

- மிகவும் விளைதிறனுடைய தடுப்புக்காப்புசேவை ஒன்றினை வழங்கி நாட்டின் அந்நியச் செலாவணியினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- தாவரத்தடுப்புக்காப்புச் சேவைகளை தன்னியக்கம் செய்தல்.

- உணவுப் பயிர்கள் மற்றும் ஏனைய பொருளாதார/ உயிரியல் விஞ்ஞான ரீதியாக முக்கியம் பெறும் பயிர்களின் தாவர மரபணு வளங்களை ஒழுங்குமுறையில் பாதுகாத்தல்.

- உள்நாட்டுப் பாவனைக்காக தாவர மரபணு வளங்களின் மாதிரிகளை விரிவுபடுத்தல்.

- மாகாண மட்டத்தில் பீடைகொல்லிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனை வலுவூட்டல்.

- பீடை கொல்லிகளின் முறைகேடான பாவனையினைக் குறைப்பதற்கான விவசாயப் போதனாசிரியர்களின் பரிந்துரையின்றி பீடை கொல்லிகளைக் கொள்வனவு செய்தலைத் தடுப்பதற்கு உரிய சட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் பீடைகொல்லி விற்பனை நிலையங்களுக்கு பயிலுநர்களை இணைத்தல்.
- பீடைகொல்லிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் நிலவும் குறைபாடுகளைத் திருத்துதல். (திருத்தங்கள் ஏற்கனவே வரையப்பட்டுள்ளன.) மற்றும் நிருவாக்கினை மேலும் முறைமைப்படுத்தல்.
- நவீன தொழில்நுட்பங்களைத் தோற்றுவித்தல் மற்றும் பின்வற்றுதல் மற்றும் சிறந்த விற்பனை உபாயமார்க்கங்களின் ஊடாக பின் அறுவடை சேதங்களைக் குறைத்துக்கொள்ளல் என்பவற்றினூடாக பின் பண்ணை வருமானத்தை பல மடங்காக அதிகரித்தல்.
- தயாரிப்புக்கள் மற்றும் பெறுமதி சேர்த்தல் என்பவற்றின் ஊடாக விவசாய உற்பத்திகளில் இருந்து கிடைக்கப்பெறும் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



அத்தியாயம் 03 - 2021 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ-எப்

2021 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

ரூபா

வ.செ.திட்டம் (நடப்பு ஆண்டு)		குறிப்பு	உண்மையான நடப்பு ஆண்டு	உண்மையான முன்னைய ஆண்டு	
-	**வருமான பெறுகைகள்**				
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி	2	-	-	ஏசீஏ -1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
400,000,000	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	567,969,837	488,134,208	
400,000,000	**மொத்த வருமான பெறுகைகள்(அ)**		**567,969,837**	**488,134,208**	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**				
-	திறைச்சேரி முற்பணம்		5,784,0676,000	5,622,096,000	**ஏசீஏ -3**
-	வைப்புகள்		349,358,747	240,601,077	**ஏசீஏ -4**
-	முற்பணக் கணக்குகள்		1,160,230,585	970,919,369	**ஏசீஏ -**
-	வேறு பெறுகைகள்		-	540,931,080	**5/5(அ)**
-	**மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)**		**7,293,656,332**	**7,374,547,526**	
	மொத்த வருமான பெறுகைகள்மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ) + (ஆ)		**7,861,626,169**	**7,862,681,734**	
	கழி: செலவினம்				
	மீண்டெழும் செலவினம்				
4,655,569,265	வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள்	5	4,349,040,301	4,447,111,936	
369,725,471	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	293,295,113	285,629,221	
48,000,000	உதவுத் தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	7	44,062,473	102,312,173	ஏசீஏ -(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
395,264	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	395,264	-	
5,073,690,000	**மீண்டெழும் செலவினம் (ஈ)**		**4,686,793,151**	**4,835,053,330**	
	மூலதனச் செலவினம்				
200,200,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	158,188,936	107,408,035	
146,600,000	மூலதனச் சொத்துக்களை கையப்படுத்தல்	11	115,430,923	83,208,794	ஏசீஏ - 2(ii)
-	மூலதன மாற்றல்கள் நிதி	12	-	-	
-	சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-	-	
15,000,000	திறன் மேம்பாடு	14	8,515,057	2,696,424	**ஏசீஏ - 2(ii)**
1,785,000,000	பிற மூலதன செலவுகள்	15	1,267,416,593	785,625,710	
2,146,800,000	**மொத்த மூலதன செலவுகள் (உ)**		**1,549,551,508**	**978,938,963**	

	பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)	**1,312,739,017**	**1,261,387,704**	
	வைப்புக் கொடுப்பனவு	298,408,690	233,787,750	**ஏசீஏ -4**
	முற்பணக் கொடுப்பனவு	1,014,330,327	1,027,599,954	**ஏசீஏ -**
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)	**7,549,083,676**	**7,075,379,997**	**5/5(அ)**
	..... டிசம்பர் 31இல் முற்பண மீதி ஏ = (இ-எ)	**312,542,493**	**787,301,737**	

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ – பீ

2021 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு

நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்பு -	உண்மையான நடப்பு ஆண்டு ரூ.	உண்மையான முன்னைய ஆண்டு ரூ.
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித் தொகுதி உபகரணம்	**ஏசீஏ-6**	26,492,456,495	24,525,447,790
நிதி சொத்துக்கள்			
முற்பண கணக்குகள்	**ஏசீஏ-5/5(அ)**	564,089,059	709,998,521
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	**ஏசீஏ-3**	-	-
மொத்த சொத்துக்கள்		**27,056,545,554**	**25,235,446,311**
நிகர சொத்து/ பங்கு			
நிகர சொத்து, பொறித் தொகுதி		(1,941,880)	197,484,689
உபகரண ஒதுக்கு		26,492,456,495	24,525,447,790
வாடகை, பணி முற்பண ஒதுக்கு	**ஏசீஏ-5(b)**	-	-
நடைமுறை பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	**ஏசீஏ-4**	566,030,939	512,513,832
முற்பண மீதி	**ஏசீஏ-3**	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**27,056,545,554**	**25,235,446,311**

மேலே உள்ள ஏ.சி.ஏ. வடிவத்தில் எண் 1 முதல் 6 வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 4 முதல் 57 வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குக்குகளுக்கான குறிப்புகள் 62 இலிருந்து 143 இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளி விவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளி விவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கிறோம்.

பிரதான கணக்கீட்டு அலுவலர்
எம்.பி.ரோஹான புஷ்பகுமார
செயலாளர் (கமத்தொழில் அமைச்சு)
2022.06.07
M.B. Rohana Pushpakumara
Secretary
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

கணக்கீட்டு அலுவலர்
கலாநிதி எஸ்.எச்.எஸ்.ஏ. டீ. சில்வா
விவசாயப் பணிப்பாளர் நாயகம்
2022.06.07
Dr. S.H.S.A. De Silva
Director General of Agriculture
Department of Agriculture
Peradeniya

பிரதான கணக்காளர்
எம்.எப்.எம். பாயிஸ்
2022.06.07
M.F.M. FAIZ
Chief Accountant
Department of Agriculture
Peradeniya

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீஏ – சீ

2021 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	நடப்பு ஆண்டு ரூபா	**முன்னைய ஆண்டு ரூபா**
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மொத்த வரி பெறுகைகள்	-	-
கட்டணம், அபராதம், தண்டப்பணம், உரிமங்கள்	567,969,837	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	1,029,065,287
மற்ற வருவாய்த் தலைவர்களுக்காக வசூலிக்கப்படும் வருவாய்	539,868,465	-
இம்ப்ரெஸ்ட் ரசீதுகள்	5,784,067,000	5,622,096,000
முற்பண அறவீடுகள்	1,163,599,363	975,298,019
வைப்புக்களின் வரவுகள்	349,358,747	240,601,077
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)	**8,404,863,412**	**7,867,060,393**
கழி – காசு செலவிடல்		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	4,641,593,129	4,729,330,732
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	44,457,737	43,993,255
பிற செலவின தலைப்புகளுக்கான செலவினம்	881,405,727	758,110,256
திறைச்சேரிக்கு	-	53,812,759
முற்பணக் கொடுப்பனவுகள்	1,013,889,320	1,027,345,806
வைப்புக்களின் கொடுப்பனவுகள்	298,408,690	233,787,750
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**6,879,754,603**	**6,846,380,558**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) - (ஆ)	**1,525,108,809**	**1,020,679,825**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு		
வட்டி	**-**	**-**
பங்கிலாபம்	**-**	**-**
சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை	-	-
கடன் அறவீடுகள்	-	-
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ)	-	-
கழி – காசு செலவிடல்		
பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்தல்	1,525,108,809	1,034,089,513
முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**1,525,108,809**	**1,034,089,513**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு (ஊ)=(ஈ) - (உ)	**(1,525,108,809)**	**(1,034,089,513)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)=(இ) + (ஊ)		**(13,409,688)**
நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்		
உள்நாட்டு கடன் பெறுகை		
வெளிநாட்டு கடன் பெறுகை		
பெறப்பட்ட மானியங்கள்		
நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஏ)		

கழி – காசு செலவிடல்	
உள்நாட்டு கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	
வெளிநாட்டு கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	
வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புகள்	
நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)	
நிதி செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ) = (ஏ) – (ஐ)	
காசில் தேசிய மாற்றம் (ஒ) = (எ) – (ஒ)	(13,409,688)
ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி	13,333,278
டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி	(76,410)

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இல்லை.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா, 000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
2003.02.18	விற்பனை மற்றும் கட்டணங்கள்	350,000,000	400,000,000	567,969,837	141.99

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா, 000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	5,073,690.00	386,896.849	4,686,793.151	92.37
மூலதனம்	7,073,785.00	450,543.491	1,549,551.508	77.47

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முதல்வராக இத்திணைக்களம்/ மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவிற்கான ஒதுக்கீடு

ரூபா, 000

இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
1	118 - கமத்தொழில் அமைச்சு	"செளபாக்யா" நோக்கத்தின் சாதனை	7,022.515	7,022.515	6,530.571	92.99
	425 – கமத்தொழில் இராஜாங்க அமைச்சு	"செளபாக்யா" விவசாய மேம்பாட்டுத் திட்டம்	1,449,697.598	1,449,697.598	1,269,405.535	87.56
3	160 – சுற்றாடல் அமைச்சு	அரச வெசாக் விழாவை ஒட்டி புத்தசாசன அமைச்சின் மரநடுகை நிகழ்ச்சி	600.00	600.00	600.00	100
4	130 - அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	2019 ஆம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் உத்தியோகத்தர் களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல்	3,000.00	3,000.00	2,785.33	92.84
5	237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்	கடைசி மைல் காலநிலை சேவைகள் முன்னோடி திட்டத்தின் கீழ் பரவல் முறைகளுக்கான தொழில்நுட்ப உபகரணங்களை வாங்குதல்	1,035.00	1,035.00	770.00	74.39

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா, 000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2019.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி	2019.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு		6,354,801.415		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்		25,187,410.88		
9153	காணி				
9154	அருவமான சொத்துக்கள்		-		
9155	உயிரியல் சொத்துக்கள்		-		
9160	நடைபெறும் பணிகள்		136,752.879		
9180	குத்தகை சொத்துக்கள்		-		

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

இணைப்பு 1

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

4.1.1. நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. ஸ்தாபிக்கப்பட்ட பாரிய குடித்தொகைகள், உயர்தர வம்சாவளிகளின் விளைச்சல் பரிசோதனைகள், ஆரம்ப விளைச்சல் பரிசோதனை, பெரிய விளைச்சல் சோதனை ஆகியவற்றின் எண்ணிக்கை	✓		
2. சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் இனவிருத்தியாளர் விதை உற்பத்தித் தொகை	✓		
3. உயிரியல் மற்றும் உயிரியல் அல்லாத தகைப்புளைத் தாங்கி வளரக் கூடிய நெல் வர்க்கங்களை அதிகரிப்பதற்காக நடாத்தப்பட்ட உயிர்த் தொழில்நுட்பம் தொடர்பான பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
4. நெல் விளைச்சல், தரம் அதனுடன் தொடர்பான தொழில்நுட்பப் பொறிகளை விருத்தி செய்வதற்காக நடாத்தப்பட்ட பயிராக்கவியல் பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
5. நெற்பயிர்ச்செய்கையில் மண், நீர் முகாமைத்துவம் தொடர்பாக நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
6. நெற்பயிரை பீடைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக நடாத்தப்பட்ட பூச்சியியல் பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
7. நெற்பயிரைப் பாதிக்கும் பல்வேறு நோய்களுக்கான எதிர்ப்புத்தன்மையை அதிகரிப்பதற்காக நடாத்தப்பட்ட நோயியல் பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
8. நெற்பயிர்ச் செய்கையில் களை முகாமைத்துவம் தொடர்பான பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
9. நெற்தானியத்தின் தரத்தை விருத்தி செய்வதற்காக நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
10. விதை நெல் உற்பத்திக்காக பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம்	✓		
11. வெளிக்களஅலுவலர்கள், விவசாயிகள், மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை		✓	

4.1.2. ஏனைய களப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. விருத்தி செய்யப்பட்ட ஏனைய களப்பயிர் வர்க்கங்களின் எண்ணிக்கை	✓		

2. உலர் வலயத்திற்கென அபிவிருத்தி செய்யப்பட்ட இனங் காணப்பட்ட மரக்கறி,பழப்பயிர் வர்க்கங்களின் எண்ணிக்கை	✓		
3. பயிர்விருத்திக்கு சாத்தியமான முறையில் பயன்படுத்தப்பட்ட உயிரியல் உபகரணங்களின் எண்ணிக்கை	✓		
4. ஏனைய களப்பயிர்களில் ஏற்படும் நோய், பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	✓		
5. உலர் வலயத்தில் பயிரின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக விருத்தி செய்யப்பட்ட பயிராக்கவியல் முகாமைத்துவ நுட்பங்களின் எண்ணிக்கை	✓		
6. உலர் வலயத்திற்காக விருத்தி செய்யப்பட்ட மண் முகாமைத்துவ நுட்பங்களின் எண்ணிக்கை	✓		
7. உலர் வலயத்தில் நீரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக விருத்திசெய்யப்பட்ட நுட்பங்களின் எண்ணிக்கை	✓		
8. ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியில் காலநிலை மாற்றம் தொடர்பாக நடாத்தப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை	✓		
9. இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் நிலவுகின்ற வெளிக்களநிலைமைகள், சமூக பொருளாதார நிலைமைகளுக்குப் பொருத்தமாக விருத்தி செய்யப்பட்ட வினைத்திறனான விவசாய இயந்திரமயமாக்கலின் எண்ணிக்கை	✓		
10. சிபாரிசு செய்யப்பட்ட ஏனைய களப்பயிர்கள், உலர் வலயத்திற்குரிய மரக்கறி/ பழப்பயிர்களின் இனவிருத்தியாளர் விதை/ நடுகைப் பொருட்களின் உற்பத்திசெய்யப்பட்ட எண்ணிக்கையும், தொகையும்.	✓		
11. பங்குதார்களிற்கு பரப்பிய விவசாயத் தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	✓		

4.1.3. பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. விருத்தி செய்யப்பட்ட உயர் விளைச்சலைத் தரும் மரக்கறி, கிழங்குப் பயிர் வர்க்கங்களின் எண்ணிக்கை	✓		
2. பயிர் வர்க்கங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக இனங் காணப்பட்ட பயிராக்கவியல் பொதிகளின் எண்ணிக்கை	✓		

3. மரக்கறிப் பயிர்ச் செய்கை முறைகளிற்கு விருத்தி செய்யப்பட்ட சூழல் நேயம் மிக்க நோய், பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவ நுட்பங்களின் எண்ணிக்கை	✓		
4. உற்பத்தி செய்யப்பட்ட கருவிதைப் பொருட்களின் தொகை	✓		
5. விருத்தி செய்யப்பட்டு, வினைத்திறனாக பரப்புரை செய்யப்பட்ட தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	✓		
6. கிடைக்கக் கூடியதாக உள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட மரக்கறி உற்பத்திகளின் எண்ணிக்கை	✓		
7. விருத்தி செய்யப்பட்டஅறுவடைக்கு முன்/ பின்னான முகாமைத்துவ நடவடிக்கைகளின் எண்ணிக்கை	✓		
8. சேதன மரக்கறிப் பயிர் உற்பத்திக்காகவிருத்தி செய்யப்பட்ட முகாமைத்துவ பொதிகளின் எண்ணிக்கை	✓		
9. உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உணவு புகைபிடிப்பவர்களின் பகுப்பாய்வு / பகுப்பாய்விற்காக மேற்கொள்ளப்படும் உணவு புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை	✓		

4.1.4 பழஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. விருத்தி செய்யப்பட்டவர்க்கங்கள் /நம்பிக்கைத் தரும் சந்ததிகள் / தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை		✓	
2. 80% இற்கும் அதிகமான முன்னேற்றத்தைக் கொண்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
3. 80% இற்கும் அதிகமான முன்னேற்றத்தைக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை	✓		
4. ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	✓		
5. பயிற்றப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை	✓		
6. குறித்த நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி, செயலாற்றுகை, முன்னேற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை	✓		
7. வளவாளர்களுடன் வசதிகள் வழங்கப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	✓		

4.1.5. இயற்கைவளங்கள் முகாமைத்துவ நிலையம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. வழங்கப்பட்ட விவசாய - வானிலை ஆலோசனைகளின் எண்ணிக்கை	✓		
2. வழங்கப்பட்ட வானிலை குறுந் தகவல்களின் எண்ணிக்கை	✓		
3. முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	✓		
4. மண்பாதுகாப்பு, நிலப்பொருத்தம் தொடர்பாக விருத்தி செய்யப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை	✓		
5. நியமனஞ் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை	✓		
6. ஸ்தாபிக்கப்பட்ட வீதியோரப் பதாதைகளின் எண்ணிக்கை	✓		
7. செய்து முடிக்கப்பட்ட தொழிநுட்பப் பிரச்சாரநிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		

4.1.6. விதை அத்தாட்சிப்படுத்தலும், பயிர்ப் பாதுகாப்பும்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
விதை அத்தாட்சிப்படுத்தற் சேவை			
1. அத்தாட்சிப்படுத்தப்பட்ட இனப்பெருக்க விதைகளின் அளவு	✓		
2. பரிந்துரை செய்யப்பட்ட ஏனைய வகுப்புக்களுக்குரிய(ஆரம்ப, அங்கீகரிக்கப்பட்ட, அடிப்படை, பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட) விதைகளின் அளவு – விதை நெல்		✓	
3. பரிந்துரை செய்யப்பட்ட ஏனைய வகுப்புக்களுக்குரிய (ஆரம்ப, அங்கீகரிக்கப்பட்ட, அடிப்படை, பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட) விதைகளின் அளவு – மேலதிக உணவுப் பயிர்கள்			✓
4. பரிந்துரை செய்யப்பட்ட ஏனைய வகுப்புக்களுக்குரிய (ஆரம்ப, அங்கீகரிக்கப்பட்ட, அடிப்படை, பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட) விதைகளின் அளவு – காய்கறிகள்			✓
5. அத்தாட்சிப்படுத்தப்பட்ட உருளைக் கிழங்கு விதைகளின் எண்ணிக்கை	✓		
6. பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளின் எண்ணிக்கை	✓		
7. சுட்டிகள் இடப்பட்ட பழப்பயிர் நாற்றுக்களின் எண்ணிக்கை	✓		
8. அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாய்த் தாவர (பழ) மரங்களின் எண்ணிக்கை		✓	
9. நடாத்தி முடிக்கப்பட்ட DUS பரிசோதனைகளின் எண்ணிக்கை	✓		
10. பிற் கட்டுப்பாட்டு வெளிக்களங்களில்பரிசோதிக்க வளர்க்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை			✓
11. விதைப் பரிசோதனை ஆய்வு கூடங்களில் முளைத்தல், ஈரப்பதன், தூய்மை ஆகியவற்றிற்காகப் பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை			✓

12. விதைகள் மூலம் பரவும் நோய்க் காரணிகளிற்காக நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை			✓
13. C மாதிரியாக பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	✓		
14. நடாத்தி முடிக்கப்பட்ட தொகை முறிப்புகளின் எண்ணிக்கை			✓
15. மேறகொள்ளப்பட்ட வகைப்பாடுகளின் எண்ணிக்கை			✓
16. பதிவு செய்யப்பட்ட விதைகளைக் கையாள்வோரின்எண்ணிக்கை		✓	
17. மீளபுதுப்பிக்கப்பட்ட விதைகளைக் கையாள் வோரின் பதிவுகளின் எண்ணிக்கை		✓	
18. பரிசோதனை செய்யப்பட்ட முறைப்பாடுகள்	✓		
19. அனுமதியளிக்கப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை			✓
20. பரிசோதனை செய்யப்பட்ட வெளிக்களங்களின் எண்ணிக்கை	✓		
21. அத்தாட்சிப்படுத்தப்பட்ட நல்ல விவசாய நடைமுறைகளைப் பின்பற்றும்(GAP) பண்ணைகளின் எண்ணிக்கை	✓		
22. நடாத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	✓		
தாவரப் பாதுகாப்புச் சேவை			
1. 1999 இன் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புதிதாக நியமனஞ்செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை			✓
2. ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு, PCCP, IAS கொறிப்பான்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக பயிற்றப்பட்ட விவசாயிகள், அலுவலர்களின் எண்ணிக்கை	✓		
3. விடுவிக்கப்பட்ட உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் எண்ணிக்கை			✓
4. பீடைகளின் தொற்றல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள், கறையான் கட்டுப்பாடு,பீடைமுகாமைத்துவம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நடாத்தப்பட்ட பீடைக் கட்டுப்பாடு தொடர்பான நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
5. பரிசோதனை செய்யப்பட்ட களைநாசினிகள், கறையான் நாசினிகளின் எண்ணிக்கை	✓		
பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகம்			
1. மதிப்பீடு செய்யப்பட்ட பீடைநாசினிகளின் எண்ணிக்கை	✓		
2. பீடை நாசினிகளின் பாதுகாப்பான பாவனையும், நியாயமான சந்தைப்படுத்தல் முறைகளையும் உறுதி செய்தல், பீடைநாசினிகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல் ஆகியன தொடர்பாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
3. இணக்கப்பாட்டினை கண்காணிக்க(உற்பத்தியின் தரம்,சுற்றாடல் கூறுகளில் காணப்பட்ட மீதிகள், 1980 இன் 33 ஆம் இலக்க பீடை நாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியமைக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை	✓		

4. உள்ளக, திணைக்களங்களிற்கிடையிலான தாபனக் கூட்டங்களில் தொழில்நுட்ப தேர்ச்சியாளர்களாக/ அங்கத்துவர்களாக/ வளவாளர்களாகசெயற்பட்ட பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கை	✓		
தாவரக் கரு மூல வள நிலையம்			
1. வெ ளிக்கள ஆய்வுகள், ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட மூலவுயிருருக்களின் எண்ணிக்கை		✓	
2. விநியோகம் செய்யப்பட்ட விதைகளின் எண்ணிக்கை			✓
3. வருணணை செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்ட மூலவுயுருருக்களின் எண்ணிக்கை	✓		
4. மதிப்பீடு செய்யப்பட்ட மரபணு பிளாஸ்மா எண்ணிக்கை			✓
5. இனவிருத்தி செய்யப்பட்டு பாதுகாப்புசெய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சேகரிப்புகளின் எண்ணிக்கை		✓	
6. நடாத்தப்பட்ட மூலக்கூற்று ஆய்வுகளின் எண்ணிக்கை		✓	
7. தரவுத் தளத்தில் காணப்படுகின்ற தரவுகளின் எண்ணிக்கை			✓
தேசிய தாவர தடுப்புக்காப்புச் சேவை			
1. தரமான (பீடைகளற்ற) தாவர, தாவர உற்பத்திகளின் ஏற்றுமதிகளின் எண்ணிக்கை	✓		
2. உள்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் தாவர, தாவரப் பொருட்களின் இறக்குமதிநிபந்தனைகளைப் பூர்த்தி செய்த இறக்குமதிகளின் எண்ணிக்கை	✓		
3. நடாத்தப்பட்ட தடுப்புக்காப்புடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை			✓
4. பங்காளிகளிற்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள், பயிற்சிகளின் எண்ணிக்கை	✓		
5. தடுப்புக் காப்பு அலுவலர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சிகள், பட்டறைகள்,விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை			✓

4.1.7 விதை, நடுகைப் பொருட்கள் அபிவருத்தி நிலையம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அத்திவார விதை நெல்லின் அளவு	✓		
2. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட விதை நெல்லின் அளவு			✓
3. ஒப்பந்தப் பயிர்ச்செய்கையின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லின் அளவு			✓
4. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அத்திவார மற்றும் பதிவு செய்யப்பட்ட மேலதிக உணவுப் பயிர்களுக்குரிய விதைகளின் அளவு			✓
5. ஒப்பந்தப் பயிர்ச்செய்கையின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக உணவுப் பயிர்களுக்குரிய விதைகளின் அளவு	✓		
6. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆரம்ப காய்கறி விதைகளின் அளவு			✓

7. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட காய்கறி விதைகளின் அளவு			✓
8. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கலப்பினக் காய்கறி விதைகளின் அளவு			✓
9. ஒப்பந்தப் பயிர்ச்செய்கையின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட காய்கறி விதைகளின் அளவு	✓		
10. பொலித்தீன் வீடுகளுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட முன் ஆரம்ப (G_0) உருளைக்கிழங்கு விதைகளின் அளவு (எண்ணிக்கை)			✓
11. பொலித்தீன் வீடுகளுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட ஆரம்ப (G_1) உருளைக்கிழங்கு விதைகளின் அளவு (மெ.தொ)	✓		
12. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆரம்ப (G_1,G_2மற்றும்G_3) உருளைக்கிழங்கு விதைகளின் அளவு	✓		
13. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட உருளைக் கிழங்கு விதைகளின் (C_1மற்றும்C_2) அளவு	✓		
14. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுக் கன்றுகளின் எண்ணிக்கை			✓
15. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட விதைக் கன்றுகளின் எண்ணிக்கை	✓		
16. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட வேர் இழுக்கப்பட்ட தண்டுத் துண்டுகளின் எண்ணிக்கை			✓
17. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மொரெய்யன் எண்ணிக்கை			✓
18. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிச் சாடிகளின் எண்ணிக்கை			✓

4.1.8 சமூகப் பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கைகளின் எண்ணிக்கை			✓
2. வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் எண்ணிக்கை	✓		
3. விநியோகம் செய்யப்பட்ட அக்ஸ்டெட், COC பயிர் எதிர்வு கூறல்கள்	✓		
4. அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பிரேரணைகள்		✓	
5. நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை		✓	
6. இற்றைப்படுத்தப்பட்ட Croplook.net இணையத் தளங்களின் எண்ணிக்கை	✓		

4.1.9 விரிவாக்கல், பயிற்சி நிலையம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. நடாத்தப்பட்ட கள விழாக்களின் எண்ணிக்கை			
2. நடாத்தப்பட்ட செய்துகாட்டல்களின் எண்ணிக்கை			✓
3. நடாத்தப்பட்ட பயிர் சிகிச்சைகளின் எண்ணிக்கை			
4. விவசாயிகளுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புக்களின் எண்ணிக்கை	✓		

5. நடாத்தப்பட்ட விவசாய உற்பத்தி தொழிநுட்பம் (NVQ – 06) தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாட நெறிக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை			
6. நடாத்தப்பட்ட விவசாய உற்பத்தி தொழிநுட்பம் (NVQ – 05) தொடர்பான தேசிய டிப்ளோமா பாட நெறிக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை			
7. டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை	✓		
8. விவசாய டிப்ளோமா கற்கை நெறி பற்றி நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை			
9. விவசாயக் கல்லூரிகளின் தரமான முறைகளை கணக்காய்வு செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட வருகைகளின் எண்ணிக்கை			✓
10. விவசாயத் திணைக்களத்தின், விரிவாக்கல் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை			
11. விவசாயிகள் மற்றும் தொழிலதிபர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை			
12. நிறுவனங்களின் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை		✓	
13. NVQ 4 மட்டத்தை சேர்ந்த தொழில்சார் பயிற்சி நெறிகளைப் பின்பற்றிய மாணவர்களின் எண்ணிக்கை			
14. நடாத்தப்பட்ட தொழில்நுட்ப வேலைக்குழுக்களின் (PTWG மற்றும் MTWG) எண்ணிக்கை			
15. நடாத்தப்பட்ட முற்போக பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை			
16. பல்கலைக்கழகங்கள், டிப்ளோமா பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை			
17. நடாத்தப்பட்ட விவசாய உற்பத்தி தொழிநுட்பம் (NVQ – 06) தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாட நெறியின் இறுதித் தவணைப் பரீட்சைகளின் எண்ணிக்கை			✓
18. நடாத்தப்பட்ட விவசாய உற்பத்தி தொழிநுட்பம் (NVQ – 05) தொடர்பான தேசிய டிப்ளோமா பாட நெறியின் இறுதித் தவணைப் பரீட்சைகளின் எண்ணிக்கை			
19. விவசாய உற்பத்தி தொழிநுட்பம் தொடர்பான தேசிய / உயர் தேசிய டிப்ளோமா பாட நெறியுடன் தொடர்பான திறன் அடிப்படையிலான மதிப்பீடுகளின் எண்ணிக்கை	✓		
20. விவசாயத் திணைக்களத்தின் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு பரீட்சைகளின் எண்ணிக்கை			✓

21. (பொருளாதார உதவியாளர்) அலுவலர்களை நியமனம் செய்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை			
22. பழங்கள் மற்றும் மரக்கறிகளைப் பொதியிடல் செய்வதற்காக அமைக்கப்பட்ட பொதியிடல் இல்லங்களின் எண்ணிக்கை			✓
23. 50% மானிய அடிப்படையில் பொருட்களை விநியோகம் செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை		✓	
24. ஸ்தாபிக்கப்பட்ட காப் அத்தாட்சிப்படுத்தல் பண்ணைகளின் எண்ணிக்கை			✓
25. சாத்தியமான தொழில் முனைவோருக்காக நடாத்தப்பட்ட தொழில்முனைவோர் பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை		✓	
26. ஸ்தாபிக்கப்பட்ட காப் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை			✓
27. புதியதாக ஸ்தாபிக்கப்பட்ட காப் விளம்பர பலகைகளின் எண்ணிக்கை			✓
28. நிர்மாணம் செய்யப்பட்ட விளம்பர பலகைகளின் எண்ணிக்கை			✓
29. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களுக்கு அவர்களுடைய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை விற்பனை நிலையங்களூடாகச் சந்தைப்படுத்தற்கென வழங்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை			
30. அமைக்கப்பட்ட மரவள்ளியில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி விவசாயக் குழுக்களின் எண்ணிக்கை	✓		

- செயலாற்றுகை 50% இலும் குறைவாகும்.

**கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக NVQ05/ NVQ06 டிப்ளோமாப் பாடநெறிகளுக்காக எந்தவொரு மாணவரும் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

*** கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2021 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்கள் அரசினால் வரையருக்கப்பட்டன. ஆதலால் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டன.

4.1.10 தேசிய விவசாயத் தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90% - 100%	75% - 89%	50% - 74%
1. நடாத்தப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
2. நடாத்தப்பட்ட வீடியோ நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	✓		
3. அச்சிடப்பட்ட பிரசுரங்களின் எண்ணிக்கை	✓		
4. நடாத்தப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகளின் எண்ணிக்கை			✓
5. விவசாய தொழில்நுட்ப பூங்காவிற்கு வருபவர்களின் எண்ணிக்கை			✓
6. பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை			✓
7. விவசாய தொழில்நுட்ப பூங்காவில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்களின் அளவு		✓	

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிகாட்டுக

இலக்கு/ குறிக்கோள்	நிகழ்ச்சி	நிலையான அபிவிருத்தி இலக்கு இல.	நிலையான அபிவிருத்தி குறிகாட்டி இல.	நிலையான அபிவிருத்தி முன்னேற்றம்		
				0-49%	50-74%	75-100%
குறிக்கோள் 2: பட்டினியை முடிவுக்குக் கொண்டுவரல், உணவுப் பாதுகாப்பும் விருத்திசெய்யப்பட்ட போசணையை அடைதலும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தலும்	1.பசுமை விவசாயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்.	2.4	2.4.1			✓
	2.பயிர்களின் விளைதிறனினை விருத்தி செய்யும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.	2.3	2.3.1 2.3.2			✓
	3. விவசாயத் தொழிநுட்ப விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	2.3	2.3.1 2.3.2	✓		
	4. தரத்தில் உயர்வான விதைகளை உற்பத்தி செய்தல் மற்றும் பிரபல்யம் செய்தல் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	2.3	2.3.1 2.3.2			✓
	5. தேசிய வளப் பாதுகாப்பு மற்றும் பயன்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்	2.5	2.5.1			✓

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக

இலக்குகளின் அடைவுகள், சவால்கள். (SDG) அத்தியாயம் 02 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

சவால்களாவன,

- 2021 ஆம் ஆண்டிலும் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை
- காலநிலை மாற்றம்
- திடீரென வெளிப்படும் பீடை, நோய்க் காரணிகள்
- நுட்பமான நடவடிக்கைகளுக்காகத் தேர்ச்சி பெற்ற மனிதவளப் பற்றாக்குறை

அத்தியாயம் 06 - மனித வளங்களின் விபரம்

06.1 பதவியணி முகாமைத்துவம்

வகுப்பு	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்/ (அதிகப்படியான)**
சிரேஷ்ட	1,047	438	609
மூன்றாம் நிலை	208	84	124
இரண்டாம் நிலை	3,646	2,992	654
ஆரம்ப நிலை	7,678	6,637	1,041

06.2 **பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையில் எவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

விவசாயத் திணைக்களமானது இலங்கை பூராகவும் பரவிக் காணப்படும் 256 தாபனங்களை உள்ளடக்கி உள்ளதுடன் அதன் அனுமதிக்கப்பட்ட பதவியணியுடன் நிலவும் பதவியணியினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2837 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. கடந்த வருடத்தில் நாடு பூராகவும் பரவிச் சென்ற கொவிட் -19 தொற்று நோய் நிலைமை காரணமாக எந்தவொரு ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

1880/26 ஆம் இலக்க மற்றும் 2014.09.19 ஆம் திகதிய இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட SCC(FR) 283/2014 ஆம் இலக்க முறைப்பாடு காரணமாக கிட்டத்தட்ட 09 வருட காலமாக இலங்கை விவசாய சேவையின் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள இயலாமல் சென்றதுடன் 2021.12.31 ஆம் திகதியன்று வெற்றிடங்களின் எண்ணிக்கை 704 என்ற நிலையை அடைந்து உள்ளது. மேற்படி உயர்நீதிமன்ற முறைப்பாட்டின்,வாதி மற்றும் பிரதிவாதித் தரப்பினர்கள் 2021.03.08 ஆம் திகதி இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளமையினால் தற்போதாகும் போது மீண்டும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அதற்கு அமைய 2 ,258 ஆம் இலக்க மற்றும் 2021.12.10 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக இலங்கை விவசாய சேவையின் ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகவும் 2 ,257 ஆம் இலக்க மற்றும் 2021.12.03 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காகவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு உள்ளன.

அவ்வாறே நேரடியாக களத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிரந்தரத் தொழிலாளர்களின் ஊழியர் பற்றாக்குறை 854 ஆகக் காணப்படுதல் விவசாயத் திணைக்களத்தின் எதிர்கால இலக்குகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு அமைய சகல தாபனங்களிலும் ஆரம்பநிலைச் சேவை வகையின் (PL – 1, PL – 2 மற்றும்PL – 3) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் திணைக்களத்தின் தாபனங்களுக்குத் தேவையான ஆளணி தொடர்பான விபரங்கள் வெவ்வேறாகபல்நோக்கு அபிவிருத்திச் செயலணித்திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது.

06.3 மனித வள அபிவிருத்தி

இணைப்பு II

அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அது பற்றி சுருக்கமமாக விளக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1.	**பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்	இணக்கமானது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு			
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு			
1.6	ஏனையவைகள்	இணக்கமானது		
2.	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தலும்,பராமரித்தலும்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைச்சேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை, காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தலும் பராமரித்தலும்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.9	இழப்புப் பதிவேட்டினை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N 20)புதுப்பித்தலும், பராமரித்தலும்	இணக்கமானது		

3.	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்படுகின்றன.	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்பட்டுத்தப்பட்டது.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது		
4.	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தலும், அதனை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NDB) உரிய திகதியில் சமர்ப்பித்தலும்.	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
5.	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமற்றது	பதிலளிப்பதில் குறித்த நிறுவனங்கள் காட்டும் தாமதம்	
6.	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி. 134 (2) டி.எம்.ஏ/ 1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது		

6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமான குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணக்கமானது		
7.	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி.எம்.ஏ. 1 -2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017. சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை செலவுக் கட்டுப்பாட்டு நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.2	மேற்கொண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அலுவலரை செலவுக் கட்டுப்பாட்டு நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமான ஒரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகபடியான, குறைபாடுகள், பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	இணக்கமானது		
9.	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		

9.2	கழிப்பணவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமற்றது	253 நிறுவனங்கள் காணப்படுவதனால் கொள்வனவிற்கான காலம் போதுமானதாக இல்லை.	
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 என் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கமானது		
10.	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்			
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமற்றது	திருத்தம் செய்யப்பட வேண்டியது அவதானிக்கப்பட்டது	
11.	**நிதி ஏற்பாட்டினை ஏற்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		
12.	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது	ஏற்புடையதன்று	ஏற்புடையதன்று
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	இணக்கமற்றது	கடன்முகாமைத்துவத்தில் காணப்பட்ட சவால்களாவன: எதிர்பாராத தொழிலாளர் பிரித்தெடுப்பும் சேவை முடிவுக்குக் கொண்டு வருதலும், குறிப்பாக கூலித் தொழிலாளர்களின்	கடன் முகாமைத்துவத்தில் நிச்சயமற்ற தன்மைகளைத் தவிர்த்து, உரிய தகவல்கள் தம்வசம் இருப்பதை உறுதி செய்து தேவையான

			உரிய தகைமைகளைச் சமர்ப்பிக்காமை, சமூகமளிக்காமை, தவறான நடத்தைகள், சீர்குலைத்தல், திருப்திகரமற்ற நடவடிக்கைகள் போன்றவை. கடந்தகால நபர்களின் தகவல்கள் தஸ்தாவேஜுகளைத் தேடிக் கண்டு பிடிப்பதிலுள்ள கஷ்டங்களும் தாமங்களும், துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.பூரண மானதும் இற்றை வரைக்குமான ஓய்வு பெற்ற அலுவலர்களின் தனிப்பட்டதும், அறிக்கைகள் கிடைக்கப் பெறாமை, ஓய்வூதிய, மீட்பு தாமதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.	நடவடிக்கைகளைத் துரிதமாக எடுப்பதற்கு சாமர்த்தியமான முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் சரியான தகவல் பேணும் முறையும் சிறந்த உருவாக்கத்திறன் எழுச்சி, பராமரித்தல் மற்றும் அத்தகவல்களை அகற்றல் கடன் முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஆற்றக்கூடியன. இச்சிக்கல்களைத் தவிர்க்குமுகமாக பின்வரும் அடிப்படை அளவுகோள்கள் கோவைகளை பராமரிக்கும் திட்டத்தின் போதே பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அறிக்கைகள் சரியானதாக இருத்தல். அலசி ஆராயப்பட்ட தகவல்களைக் கொண்டிருத்தல், அவசியமான சகல தகவல்களையும் அடக்கியிருத்தல், மற்றும் சம்பந்தப்பட்ட சகல அங்கத்தவர்களினதும் நம்பிக்கையைக் கொண்டிருத்தல்.
13.	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு பதிவினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14.	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கமானது		

14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமற்றது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15.	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணக்கமானது		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16.	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	இணக்கமற்றது	• இலங்கை விவசாய சேவையின் 704 வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் தற்போதாகும் போது கோரப்பட்டு உள்ளன. 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு அமைய சகல தாபனங்களினதும் ஆரம்பநிலைச் சேவை வகையின் (PL – 1, PL – 2 மற்றும்PL – 3) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவது டன் திணைக்களத்தின் தாபனங்களுக்குத் தேவையான ஆளணி தொடர்பான விபரங்கள் வெவ்வேறாகபல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது.	திணைக்கள மட்டத்தில் தேவையான பணிகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 திகதியிட்ட எம்.எஸ்.டி. சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
17.	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
18.	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2008 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள்/ வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது		
19.	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமற்றது		2020 ஆம் ஆண்டிற்கான மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கொண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமற்றது	எனினும் கொவிட் 19-தொற்று நோய் நிலைமையின் கீழ் மற்றும் கொள்ளளவு விருத்திக்கான வரையருக்கப்பட்ட கொள்கைகள் காரணமாக ஏராளமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இரத்து செய்ய வேண்டி ஏற்பட்டது.	நிகழ்நிலை முறையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்ளல்.

19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமற்றது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமற்றது		
20.	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்.	இணக்கமானது		

இணைப்புகள்

இணைப்பு I

கேடீஏ/பீ/டீஏ/2/21/டீ/74 2022 மே 31 ஆம் திகதி

கணக்கீட்டு உத்தியோகத்தர்,

விவசாயத் திணைக்களம்.

விவசாயத் திணைக்களத்தின் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பொழிப்பு அறிக்கை

---

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1. **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விவசாயத் திணைக்களத்தின் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 21 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசையும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளக நிருவாகத்தினைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் என்பன பேணி வரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறனுள்ள உள்ளக நிருவாக முறைமையொன்றை தயாரித்து பேணி வருவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் மேற்படி முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம்

மீளாய்வொன்றினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் அது பாதிப்புச் செலுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் சார் நியாயத் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாக முன்வைத்தல் காரணமாக ஏற்படும் அளவுகள் சார் பொய்யான கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்திலும் பார்க்க மோசடிகளினால் ஏற்படும் தாக்கம் ஆதிக்கம் கூடியது என்பதுடன், ஏமாற்றுக் கூட்டுச்சக்தி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், உள்நோக்குடன் புறக்கணித்தல், தவறாக முன்வைத்தல் அல்லது உள்ளக நிர்வாகங்களைப் புறக்கணித்தல் என்பன மோசடிகள் ஏற்படக் காரணங்களாக அமையும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாவிடினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிருவாகம் தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒத்தியங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தல்

1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

1.6.1.2 நிதி அல்லாத சொத்துக்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டு இருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ – 6 மாதிரிப்படிவத்திற்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் சனவரி 01 ஆம் திகதியன்று நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூ. 26,383,858,018 ஆகக் காணப்பட்ட போதிலும் அதற்கு முன்னைய வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சொத்துக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் விடயத்தில் மற்றும் அதற்கு உரிய இருப்புக்களின் மீதி ரூ. 24,525,447,790 ஆகக் காணப்பட்டதனால் ரூ. 1,858,410,228 தொகை சீராக்கல்களுக்கு உரிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) கடந்த வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நடைபெற்ற நிதி அல்லாத சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் மீதி, நிதிக் கூற்றுக்களுக்கு அமைய ரூ. 24,525,447,790 ஆகக் காணப்பட்ட போதிலும் திறைசேரியின் அச்சுக் கூற்றின்

SA82 மாதிரிக்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் சனவரி 1 ஆம் திகதியன்று மீதி ரூ. 24,528,396,296 தொகையாகக் காணப்பட்டதனால் ரூ. 2,948,506 தொகை வேறுபாடு ஒன்று நிலவியது.

(இ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டு இருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ -6 மாதிரிப்படிவத்திற்கு அமைய மற்றும் திறைசேரிக் கூற்று SA82 மாதிரிப்படிவத்திற்கு அமைய ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விடயங்களுக்கு உரிய ஒவ்வொவ்வொரு மீதிகளிலும் மாற்றங்கள் நிலவின.

(ஈ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று போக்குவரத்து உபகரணங்களின் மீதி ரூ. 1,439,705,548 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்களுடன், முன்வைக்கப்பட்டு இருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ-6 மாதிரிப்படிவத்திற்கு அமைய மேற்படி மீதி ரூ. 1,192,187,538 ஆகக் காணப்பட்டமையினால் போக்குவரத்து உபகரணங்களின் மீதி ரூ. 247,518,010 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவ்வாறே திணைக்களத்திற்கு உரித்தான 184 வாகனங்களின் பெறுமதியினைக் கணிப்பிட்டோ அல்லது நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியோ இருக்கவில்லை.

(உ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று கட்டிடங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் மீதி ரூ. 6,491,554,294 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்களுடன், முன்வைக்கப்பட்டு இருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ-6 மாதிரிப்படிவத்திற்கு அமைய மேற்படி மீதி ரூ. 1,908,156,606 ஆகக் காணப்பட்டமையினால் கட்டிடங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் மீதி ரூ. 4,583,397,688 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவ்வாறே திணைக்களத்திற்கு உரித்தான 148 கட்டிடங்கள் மதிப்பீடு செய்வதற்காக முனவைக்கப்பட்டு இருந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் 1388 கட்டிடங்களுக்கு உரிய வகையில் பெறுமதிகளை அடையாளம் காண்பதற்காக மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவினால் காணிகளின் மீதிக்கு உரிய பெறுமதி முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், நிதிக் கூற்றுக்களுடன், முன்வைக்கப்பட்டு இருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ- 6 மாதிரிப்படிவத்திற்கு அமைய மேற்படி மீதி ரூ. 17,813,491,318 தொகையாகக் காணப்பட்டது. மேலும் 517 காணி அலகுகளுக்கு உரிய வகையில் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் 103 காணி அலகுகளுக்கு உரிய வகையில் நில அளவுகளையும் அடையாளம் கண்டு பெறுமதிகளைக் கணிப்பிட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(எ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று தளபாடங்கள் உட்பட ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூ. 2,410,236,758 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்களுடன், முன்வைக்கப்பட்டு இருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று, ஏசீஏ-6 மாதிரிப்படிவத்திற்கு

அமைய மேற்படி மீதி ரூ. 995,223,344 ஆகக் காணப்பட்டமையினால் தளபாடங்கள் உட்பட ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூ. 1,415,013,414 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவ்வாறே நன்கொடையாகக் கிடைக்கப்பெற்று இருந்த சொத்துக்களின் பெறுமதியினை அடையாளம் கண்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

1.6.2 நிதிப் பாய்ச்சல் கூற்று

1.6.2.1 நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய காசுப் பாய்ச்சல்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கு உரிய வகையில் நிதி பாய்ந்து செல்லல் ரூ. 6,055,095,662 ஆகக் காணப்பட்ட போதிலும் அது நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதியின் கீழ் ரூ. 4,641,593,129 தொகையாகக் குறிப்பிடப்பட்டமையினால் நிதி பாய்ந்து செல்லல் ரூ. 1,413,502,533 தொகையினால் குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

1.6.2.2 முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய காசுப் பாய்ச்சல்

பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீடுகளை சுவீகரித்துக் கொள்ளல் ஆகிய செயற்பாடுகளினால் தோன்றிய நிதியின் அளவு ரூ. 111,606,276 தொகையாகக் காணப்பட்ட போதிலும் அது ரூ. 1,525,108,809 தொகையாக ரூ. 1,413,502,533 அதிகமாகக் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

1.6.3 முற்பணக் கணக்குகளின் மீதிகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டு இருந்த முற்பணக் கணக்குகள் தொடர்பான கூற்று ACA5 மாதிரிப்படிவத்திற்கு அமைய பண்ணைப் பராமரிப்புக்கள் மற்றும் விதைகள் விற்பனை முற்பணக் கணக்கில் 2021 ஆம் ஆண்டில் பற்றுக்கள் மற்றும் வைப்புக்கள் முறையே ரூ. 801,737,314 மற்றும் ரூ. 935,890,785 தொகையாகக் காட்டப்பட வேண்டும் எனினும் மேற்படி மாதிரிப்படிவத்தில் மேற்படி பெறுமதிகள் ரூ. 198,325,389 மற்றும் ரூ. 184,302,639 தொகைகளாகக் குறிப்பிடப்பட்டு இருந்தன.

1.6.4 வணிக முற்பணக் கணக்குகள்

திணைக்களத்தினால் 28502 ஆம் இலக்க வணிக முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருந்தன. கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேற்படி கணக்கு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வு விசாரணையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழ்வருமாறு அமையும்.

1.6.4.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) நிக்கவெரட்டிய பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் 2021 ஆம் ஆண்டில் ரூ. 400,000 தொகை பெறுமதியான டிரக்டர் வண்டி ஒன்று எலுவன்குளம் பண்ணைக்கு அனுப்பப்பட்டு இருந்த போதிலும் அது நடைமுறை ஆண்டில் எலுவன்குளம் பண்ணையின் சொத்துக்களின் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு இருக்காமை காரணமாக வருடத்தின் தேய்மானம் ரூ. 17,593 தொகை குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஆ) முற்பணப் பணிக்குப் பங்களிப்பினை வழங்கும் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் 05 உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய பெறுமதி ரூ. 60,132,527 தொகைக் களஞ்சியங்கள் நேரடியாக பண்ணை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு இருந்த போதிலும் மேற்படி கட்டிடங்களின் பெறுமதி மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தேய்மானம் செய்யப்பட்டு இருக்கவில்லை.

(இ) கரதியனாறு விதை உற்பத்திப் பண்ணையில் ரூ. 182,250 தொகை இன்வென்ட்ரிப் பொருட்களின் விடயம் ஒன்று கழித்து ஒதுக்கப்பட்டு இருந்ததுடன் ,அது கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது 2011 ஆண்டிலாக இருந்தது. அதற்கு அமைய 9 ½ வருடங்களுக்காக ரூ. 115,173 தொகை தேய்மானத்தினை அகற்ற வேண்டும் எனினும் தேய்மானங்களை ஒதுக்கும் கணக்கில் இருந்து மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தேய்மானங்களின் நீக்குதல்களாக மேற்படி சொத்துக்களுக்கு உரிய வகையில் 04 ½ வருடங்களுக்காக ரூ. 68,811.93 தொகைத் தேய்மானம் குறைக்கப்பட்டு இருந்தது. அதற்கு அமைய ரூ. 46,361 தொகை திரண்ட தேய்மானம், தேய்மானத்தினை ஒதுக்கும் கணக்கில் இருந்து ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) பல்வெஹெர பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதை) அலுவலகத்தின் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியன்று இருப்புக்களின் மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ரூ. 353,304 தொகை பெறுமதியான நுகர்வோர் நெல் இருப்பு இறுதி முடிவு இருப்பில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக வர்த்தகக் கணக்கின் இலாபம் மேற்படி பெறுமதியில் இருந்து குறைவாகக் காட்டப்பட்டு இருந்தது.

(உ) ஹொரண பழப்பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தின் மீளாய்வு ஆண்டிற்கான இருப்புக்களின் மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய நடுகைப் பொருட்களின் பெறுமதி ரூ. 353,304

தொகையாக கணக்கில் சேர்க்கப்படல் வேண்டும் எனினும் ரூ. 1,107,318 தொகையாக கணக்கில் சேர்க்கப்பட்டமை காரணமாக, நடுகைப் பொருட்களின் இருப்பின் பெறுமதி மற்றும் மொத்தப் பெறுமதி ரூ. 959,000 தொகை அதிகமாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

(ஊ) உள்நாட்டு உருளைக்கிழங்கு விதையினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வு ஆண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த மொத்தம் ரூ. 1,539,738 தொகையான சொத்துக்களின் 09 விடயங்கள் உரிய பண்ணை / பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களின் நிலையான சொத்துக்களாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அதன் காரணமாக அதற்கு உரிய சொத்துக்களின் தேய்மானமும் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(எ) விவசாயப் பண்ணைகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த மொத்தம் ரூ. 8,502,400 தொகை பெறுமதியான 06 சொத்து விடயங்கள் உரிய பண்ணைகளின் நிலையான சொத்துக்களாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அதன் காரணமாக வருடத்திற்கு உரிய இயந்திரங்களின் தேய்மானம் ரூ. 212,560 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

(ஏ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 2,630,538 தொகை சேரல் செலவுகள் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்காமை காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செலவுகள் மற்றும் கடன் உரித்தாளர்கள் ஆகியன மேற்படி அளவிலும் குறைவாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

(ஐ) அம்பேபுஸ்ஸ பண்ணையில் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சேரல் செலவுகள் ரூ. 153,573 தொகை அதிகமாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தது.

(ஒ) கடந்த வருடத்தின் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பொழிப்பு அறிக்கையின் 1.6.1 (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு இருந்த கந்தபொல விதை உருளைக்கிழங்குக் களஞ்சியத்தின் உர மூலப்பொருட்களின் இருப்பின் பெறுமதி ரூ. 1,760,000 தொகை மற்றும் சீதாஎலிய விதை உருளைக்கிழங்குக் களஞ்சியசாலையின் முடிவு இருப்பு ரூ. 7,606,473 தொகை என்பன குறைவாக கணக்கில் சேர்க்கப்பட்டதனை சீர் செய்யும் போது தவறுதலாக ஆரம்ப மூலப்பொருட்களின் இருப்பின் பெறுமதிக்கு ரூ. 7,606,473 தொகை என ரூ. 5,846,473 தொகை கூடுதலாகவும் ஆரம்ப முடிவு இருப்பின் பெறுமதிக்கு ரூ. 1,760,000 தொகை என ரூ. 5,846,473 குறைவாகவும் கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தன.

(ஓ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி பொலன்னறுவை விதை விற்பனை நிலையத்தின் கடன்படு மீதி ரூ. 5,311,803 அதிகமாகக் கணிப்பிடப்பட்டு இருந்தமையினால் நிதிக் கூற்றுக்களில் கடன்படு மீதி குறிப்பிட்ட அளவினால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது நிதி ஒழுங்குவிதி 85(1)(இ) , 143(1) இற்கு அமைய மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய மற்றும் 01/2015 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றுநிருபத்தின் 03 ஆவது பந்திக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். எனினும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் வருமானக் குறியீட்டு இலக்கம் 2003-02-18 இற்கான ஆரம்ப வருமான மதிப்பீட்டினை ரூ. 350,000,000 தொகையிலிருந்து ரூ. 400,000,000 தொகையாக திருத்தம் செய்யப்பட்டு இருந்த போதிலும் தேறிய வருமானம் ரூ. 567,969,837 எனும் திருத்தம் செய்யப்பட்ட வருமானத்திலும் பார்க்க நூற்றிற்கு 42 ஆகக் காணப்பட்டமையினால் மதிப்பீடுகளைத் தயாரித்தல் தவறுகளைக் கொண்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

2.2 செலவின முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் திணைக்களத்தின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 01 மற்றும் 02 இன் கீழ் ரூ. 7,220,490,000 தொகை ஒதுக்கீடு ஒதுக்கிக்கொள்ளப்பட்டு இருந்த போதிலும், அதில் ரூ. 984,145,341 தொகை எஞ்சியிருந்ததுடன் அது மொத்த தேறிய ஒதுக்கீட்டின் நூற்றிற்கு 13.63 ஆகக் காணப்பட்டது. அவ்வாறே மீதிகளில் நூற்றிற்கு 61 வீதம் மூலதனச் செலவுகளின் மீதிகளாவதுடன் அது ரூ. 597,248,492 எனும் தேறிய மூலதன ஒதுக்கீட்டின் நூற்றிற்கு 28 ஆகும்.

(ஆ) நிதி ஒழுங்குவிதி 50 இற்கு அமைய மதிப்பீடுகளை இயன்றளவு முழுமையாக சரியான முறையில் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு எனினும் 10 செலவு விடயங்களின் மதிப்பீட்டு ஒதுக்கீட்டில் இருந்து ரூ. 27,663,301 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டு இருந்ததுடன் மேற்படி மாற்றல்களின் சதவீதம் 0.37 தொடக்கம் 27.27 வரையான வீச்சு ஒன்றில் காணப்பட்டது.

(இ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சிற்றளவு விவசாய ஆராய்ச்சிக் கருத்திட்டத்திற்காக ரூ. 1,000,000 மற்றும் கடந்த வருடத்தில் ரூ. 3,000,000 தொகை ஒதுக்கீடு ஒன்று ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் மேற்படி ஒதுக்கீடு முழுமையாக எஞ்சியிருந்தமையின் காரணமாக கருத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்தன.

(ஈ) 2019 டிசம்பர் 03 ஆம் திகதிய மற்றும் 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய செலவுகளின் சாராம்சம் ACA (II) மாதிரிப் படிவத்தின் ஒவ்வொவ்வொரு செலவு விடயங்களுக்கும் உரிய வகையில் தேறிய ஒதுக்கீட்டின் மீதி நூற்றிற்கு 5 வீதமாக

வரையருக்கப்படல் வேண்டும் எனினும் திணைக்களத்தின் 81 செலவு விடயங்களின் தேறிய ஒதுக்கீடாகிய ரூ. 3,868,116,234 தொகையில் ரூ. 877,810,325 தொகை எனும் நூற்றிற்கு 23 தொகை எஞ்சியிருந்தது. மேற்படி மீதி நூற்றிற்கு 7 இற்கும் நூற்றிற்கு 96 இற்கும் இடையிலான வீச்சு ஒன்றாகக் காணப்பட்டது.

2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியிருப்பினும், அதற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு தேவையான வகையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்களை வழங்குதல் நடைபெறுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனினும், அறிக்கையின் 3.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள 04 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்கள் வழங்கப்பட்டு இருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்திசையாமை

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்திசையாத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான முன்னளிப்பு	**பெறுமதி**	**ஒத்திசையாமை**
(அ)	1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் ..... சட்டத்தின் 21 (4) (அ) ஆம் பிரிவு		பீடை கொல்லிகள் பதிவாளர் அலுவலகத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 23 ஆம் திகதியாகும் போது 232 பீடைநாசினி விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை --- Xix ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு		ஏதேனும் பதவி ஒன்றிற்கு ஒதுக்கப்பட்ட இல்லம் ஒன்று தவிர்ந்த ஏனைய சகல இல்லங்களினதும் குத்தகைக் காலம் 05 வருடங்கள் எனினும் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரீட்சிப்புக்களின் போது 2 நிறுவனங்களில் 17 உத்தியோகத்தர்களின் 5 வருடங்கள் கடந்து 2 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலம் அரச இல்லங்களில் தொடர்ச்சியாக வசித்து வந்தனர்.
(இ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள் தொகுதி 1 இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் பந்தி		
(ஈ)	**அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபங்கள்** **---** 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம்		13 பணிப்பாளர் பிரிவுகளுக்கு உரித்தான ஓட்டத்தில் ஈடுபடும் 215 வாகனங்களின் எரிபொருள் தகனம் மீளாய்வு ஆண்டிற்கு உரிய வகையில் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.
(உ)	2015 ஏப்பிறல் 24 ஆம் திகதிய மற்றும் 03/2015 ஆம் இலக்க ஓய்வூதியச்	ரூ..2,440,247	ஓய்வூதியம் பெறும் தினத்திலேயே ஓய்வூதியத்தினை

	சுற்றுநிருபம்	வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனினும் மீளாய்வு ஆண்டிற்குள் ஓய்வு பெற்ற 33 உத்தியோகத்தர்களுக்கு உரிய வகையில் பிரத்தியேக கோப்பின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கடன் மீதிகளை பணிக்கொடைகளில் இருந்து அறவிட்டுக்கொள்ள முடியாமல் இருந்தது.
(ஊ)	2003 மே 12 ஆம் திகதிய மற்றும் 2003/01 ஆம் இலக்க கமத்தொழில் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபம்	மாகதுர விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் 08 இல்லங்கள் பழுதுபார்க்கப்பட்டு இருந்த போதிலும் தொடர்ந்தும் பொருளாதார வாடகையே அறவிடப்பட்டு இருந்தது.

2.5 முற்பணங்களை வழங்குதல் மற்றும் ஈடுசெய்தல்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) கொடுக்கல்வாங்கல்களை தீர்வு செய்து நிறைவு செய்யும் 5 முற்பணக் கணக்குகளுக்கு உரிய வகையில் 18 வருடங்களுக்கும் 29 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்த அனுமதிக்கப்படாத திரண்ட நிருவாக நட்டங்களின் மொத்தம் ரூ. 67,146,096 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 285-05 ஆம் விடய இலக்க அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் முற்பணப் பணியினைக் கலைத்து விடும் முற்பணக் கணக்கிற்கு உரிய 29 வருடங்களைத் தாண்டியிருந்த ஈடுசெய்யப்பட வேண்டிய மீதி ரூ. 76,157 ஆகக் காணப்பட்டது.

2.6 வைப்புக்கள்

வைப்புச் செய்யப்பட்ட தினம் தொடக்கம் 2 வருடங்களைத் தாண்டிய மொத்தம் ரூ. 4,495,882 தொகையாகிய 7 வைப்புக்களின் மீதி தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 571 இற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 திட்டமிடல்

கன்னோருவைக் குளத்தினை மறுசீரமைப்பு செய்வதற்காக ஏனைய மூலதனச் செலவு விடயத்தின் 285-2-2-7-2507 கீழ் ரூ. 1,000,000 தொகை நிதி ஒதுக்கீடுகள் மீளாய்வு ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த போதிலும் உரிய நிதியினை ஈடுபடுத்துவது எவ்வாறு என்பது தொடர்பான செயற்பாடுகள் உள்ளடங்கிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டோ அல்லது குளம் மறுசீரமைக்கப்பட்டோ இருக்கவில்லை.

3.1.2 எதிர்பார்க்கப்பட்ட முடிவு மட்டத்தினைப் பெற்றுக்கொள்ளாமை

ரஹங்கல விதை உற்பத்திப் பண்ணையின் அடிப்படை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விதை உற்பத்தி தொடர்பில் கடந்த 7 போகங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு போஞ்சி,தக்காளி மற்றும் முள்ளங்கி என்பவற்றிற்கு உரிய மொத்தம் 12390 கிலோகிராம் ஆகக் காணப்பட்டதுடன் அதற்காக ரூ. 11,518,086 தொகை செலவு ஒன்று ஏற்கப்பட்டு இருந்த போதிலும் உண்மையான அடிப்படை விதை உற்பத்தி 4654 கிலோகிராம் ஆகும். அது எதிர்பார்க்கப்பட்ட இலக்கின் நூற்றிற்கு 37 ஆகிய மிகவும் குறைந்த மட்டம் ஒன்றில் காணப்பட்டது.

3.1.3 எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ளாமை

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) விவசாயத் திணைக்களத்தின் கீழ் நிலவும் நிறுவனங்களை, கமத்தொழில் சேவைகள் நிருவாக சபையுடன் வலையமைப்பிற்கு உட்படுத்தும் போது அதற்கு உரிய வகையில் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரண்டாம் நிலை மட்டத்தில் 50 தகவல் தொழிநுட்ப உதவியாளர் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்குத் தேவையான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு 23 உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு இருந்தனர். அலுவலர் குலாத்தின் ஆட்சேர்ப்பு, கட்டிடங்களைத் தாபித்தல் என்ற வகையில் வலையமைப்புச் செய்வதனை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்த போதிலும் வலையமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட வகையில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) விவசாய உற்பத்தித் தயாரிப்புத் தொழிநுட்பத்தினை விருத்தி செய்தல் மற்றும் பிரபல்யம் செய்தல் என்பவற்றிற்கான கொரிய வெளிநாட்டு உதவிக்

கருத்திட்டத்திற்காக ரூ. 9,535,700 தொகைச் செலவு ஒன்று ஏற்கப்பட்டு இருந்ததுடன் மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக விவசாயிகள் குழுவிற்கு வழங்குவதற்கான ரூ. 1,577,011 பெறுமதியான 27 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் போது 11 பொருட்கள் மாத்திரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தன. அவ்வாறே பொருத்தமான கட்டிடம் ஒன்று மற்றும் அதற்கு மின் இணைப்பினைப் பெற்றுக்கொள்ளாமை என்பன காரணமாக உரிய பொருட்கள் பயன்படுத்தப்படாது மற்றும் பலனின்றிக் காணப்பட்டது. மேலும் இந்த கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறைந்த வருமான மட்டம் ஒன்றினைக்கொண்ட மரவள்ளி விவசாயிகளின் மற்றும் தயாரிப்பாளர்களின் வருமான மட்டத்தினை விருத்தி செய்யும் நோக்கம் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே மொத்தம் ரூ. 1,483,846 ஆகிய 10 செலவு விடயங்கள் நேரடியாக கருத்திட்டத்திற்கு தொடர்பற்ற வகையில் செலவிடப்பட்டு இருந்தது.

3.1.4 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீடுகளின் கீழ் விவசாயத் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளை ஈடுபடுத்தி 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழில்முயற்சியாளர் கொத்தணிக் கிராமங்களின் அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்டத்தின் கீழ் 40 பொலித்தீன் இல்லங்களை நிர்மாணிக்க இலக்காகக் கொள்ளப்பட்ட போதும் 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதியாகும் போது 16 இல்ல அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்கவில்லை. 2022 சனவரி 01 ஆம் திகதியாகும் போதும் மொத்த ஒதுக்கீட்டின் நூற்றிற்கு 28 எனப்படும் ரூ. 2,635,924 தொகை செலவிடப்படாது எஞ்சியிருந்தது.

(ஆ) தொழில் முயற்சியாளர் கொத்தணிக் கிராமங்களின் அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்டத்தின் கீழ் நாற்றுக்களை நடுவதற்காக ரூ. 795,000 தொகையினைச் செலவழித்து பயிர்ச்செய்கைக்கான உறைகள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் 20 விவசாயிகள் அவற்றைப் பயன்படுத்தி இருக்கவில்லை. மிளகாய் விதைகளைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக குளிர்சாதனப் பெட்டி ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு ரூ. 200,000 தொகை ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் 2021 ஒற்றோபர் 12 ஆம் திகதியாகும் போதும் அது கொள்வனவு செய்யப்பட்டு இருக்கவில்லை. மிளகாய்க் கன்றுகளுக்கு திரவப் பசளையினை இடுவதற்காக ரூ. 174,468 பெறுமதியான 500 லீற்றர் நீர்த் தாங்கிகள் 40 கொள்வனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் பலனின்றிக் காணப்பட்டது. அவ்வாறே இந்தக் கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து ஏனைய பணிகளுக்காக ரூ. 987,705 தொகை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

(இ) மீபிலிமான, உடரதெல்ல, சீதாஎலிய மற்றும் பிதுருதலாகல விதை உருளைக் கிழங்கு உற்பத்திப் பண்ணைகளின் உள்ளக வீதித் தொகுதியினை நேரடி உழைப்பின் கீழ் கொங்கிறீட் செய்வதற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 3,959,200 தொகை மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டு

இருந்ததுடன் எந்தெந்தப் பண்ணைகளில் எந்த உள்ளகப் பாதைகளை எந்த அளவு வரை மேற்கொள்வது என்பது தொடர்பாக அண்ணளவான திட்டம் ஒன்று மற்றும் அளவைகள் தாள் (BOQ) என்பன தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் பொருட்களின் பட்டியல்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டு இருந்தன. 2021 நவெம்பர் 24 ஆம் திகதி 36 மணல் கியூப்ஹள் மற்றும் 72 மெட்டல் கியூப்ஹள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 1,587,000 தொகை வழங்குனருக்கு செலுத்தப்பட்டு இருந்ததுடன் சீமெந்து, சதுர வடிவ வலை மற்றும் பலகைகள் என்பன கொள்வனவு செய்யப்படாமையின் காரணமாக 2021 டிசம்பர் 02 ஆம் திகதியாகும் போதும் மேற்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) விதைப் பண்ணைகள் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பேபுஸ்ஸ விதை உற்பத்திப் பண்ணைக்கான விதைகளை உலர்த்தல் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், மழைக் கவச இல்லங்களை நிர்மாணித்தல், விசிறும் நீர்ப் பாசனக் கட்டமைப்பினை நிர்மாணித்தல் ஆகிய 8 மூலதனச் செயற்பாடுகளுக்காக ரூ. மில்லியன் 37.19 ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் மேற்படி பணிகள் 2021 நவெம்பர் 16 ஆம் திகதியாகும் போதும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(உ) அலுவலகத்தின் இட வசதிகள் போதியதாக இல்லாமை காரணமாக கலந்துரையாடல் அறை மற்றும் பதிவேட்டறை என்பவற்றை தாபிக்கும் நோக்கில் ரூ. 4,967,502 தொகையினைச் செலவழித்து பீடைகொல்லிகள் பதிவாளர் அலுவலகத்திற்கு அண்மையில் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு அனுமதிக்கப்பட்டு இருந்த போதிலும் அதன் அத்திவாரத்தினை இட்டு தூண்களை நிர்மாணித்து கூரை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. மீளாய்வு ஆண்டில் ரூ. 496,003 தொகையினைச் செலவழித்து மேற்படி கட்டிடத்தின் கீழ் மாடியில் அறிக்கையிடல் அறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதிலும் அதிலும் 2021 டிசம்பர் 24 ஆம் திகதியாகும் போது கிட்டத்தட்ட நூற்றிற்கு 70 சதவீத வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. இதற்கு அமைய கட்டிடத்தின் ஏனைய வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டு முதல் அது பலனின்றிக் காணப்பட்டது.

3.1.5 நிதி விடுவிக்கப்பட்டு இருந்த போதிலும் முன்னேற்றம் ஒன்றினைப் பெற்றிருக்காத கருத்திட்டங்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) கன்னோருவை விவசாயத் தொழிநுட்பத் தோட்ட அலகினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 5 பணிகளுக்காக ரூ. 508,924 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் மேற்படி பணிகள் 2021 ஒற்றோபர் 29 ஆம் திகதியாகும் போதும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) அன்னாசி, வாழைச் செய்கை மற்றும் குறைவான பாவனைகளைக் கொண்ட பழச் செய்கைகளுக்கு நீர்ப்பாசனத்தினை மேற்கொள்ளும் நோக்கில் துளி நீர்ப்பாசனக் கட்டமைப்பு ஒன்றினை அம்பேபுஸ்ஸ விதை உற்பத்திப் பண்ணையில் 2 ஹெக்ரயார்

பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூ. 5,166,127 தொகைச் செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் அவற்றுள் ரூ. 2,398,957 பெறுமதியான சாதனங்கள் காய்கறி விதை உற்பத்தித் துறைக்கு ஈடுபடுத்தப்பட்டு இருந்ததுடன் ரூ. 2,767,169 பெறுமதியான உபகரணங்கள் பயன்படுத்தப்படாது 2021 நவெம்பர் 16 ஆம் திகதியாகும் போதும் பலனின்றிக் காணப்பட்டது.

3.2 பெறுகைகள்

கன்னோருவை விவசாயத் தொழிநுட்பத் தோட்ட அலகு ரூ. 653,072 பெறுமதியான காவற்கூடங்கள் இரண்டினை நிர்மாணிப்பதற்காக பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த போதிலும் காவற்கூடங்கள் இரண்டிலும் பூச்சுப் பூசுதல், சிவிலினைப் பொருத்துதல், 20W LED Placer Light பொருத்துதல் என்பவற்றிற்காக ரூ. 116,114 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்து அனைத்துப் பொருட்களும் களஞ்சியசாலையில் இருந்து வழங்கப்பட்டு இருந்த போதிலும் 2021 நவெம்பர் 26 ஆம் திகதியாகும் போதும் மேற்படி பணிகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. மேலும் ரூ. 25,470 தொகை பெறுமதியான ரூ. ½ அங்குல 12 பிளைவூட் போட்ஹள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு இருந்த போதிலும் அவையும் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

3.3 சொத்து முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) அரச காணிகள் தொடர்பான செயலாற்றுகைக் கோவையின் 224 ஆம் பிரிவின் பிரகாரம் அரச திணைக்களங்களுக்கு உரிய காணிகளை நில அளவை செய்தல் மேற்கொள்ளப்பட்டு முறையான வகையில் சுவீகரித்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் திணைக்களத்திற்கு உரித்தான 10 பிரிவுகளுக்கு உரிய 3901.82 ஹெக்ரயார்களாகிய மொத்த நிலப் பிரதேசத்தில் 2935.35 ஹெக்ரயார்ஹள் சுவீகரிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) ரஹங்கல விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு உரித்தான கெப் வண்டி ஒன்று 2020 யூன் 18 ஆம் திகதி தொடக்கம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக நாளாந்த ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டு, 2021 யூலை 26 ஆம் திகதியாகும் போது வாகனத்திற்கு ஒரு வருட காலம் கடந்திருந்த போதிலும் மேற்படி வாகனத்தினைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(இ) மாகதுர நிலையான விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் 32 ஹெக்ரயார் அளவிலான காணியில் 18 ஹெக்ரயார் மாத்திரம் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு இருந்ததுடன், எஞ்சிய 14

ஹெக்ரயார் நிலப் பகுதி விளைதிறனுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

3.4 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்.

நிதி ஒழுங்குவிதி 880 மற்றும் 612 ஆம் அதிகாரமாகிய அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைகள் சட்டத்தின் பிரகாரம் 05 நிறுவனங்களில் பிணை வைக்கப்பட வேண்டிய 28 உத்தியோகத்தர்களினால் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் பிணைத் தொகைகள் வைப்புச் செய்யப்பட்டு இருக்கவில்லை.

3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) கன்னோருவை ஹெல பொஜுன்ஹல வாகனத் தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதியின் கால்வாய்க் கட்டமைப்பினை மூடுதல் மற்றும் நிலத்தை கொங்கிறீட் செய்து நவீன மயப்படுத்தல் என்பவற்றிற்காக ரூ. 495,240 தொகை பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்து நேரடி உழைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் 2021 ஒற்றோபர் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் போது அளவிடும் போது மொத்தமாக கொங்கிறீட் இட்டு மூடப்பட்டு உள்ள பிரதேசம் 173.42 சதுர மீற்றர்களாகக் காணப்பட்டது. அதற்குத் தேவையான பொருட்களின் அளவு மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட அளவுகள் தொடர்பில் கணிப்பிடும் போது ரூ. 156,720 தொகை பொருட்களின் குறைபாடு காணப்பட்டது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சீதாஎலிய விதை உருளைக் கிழங்குக் களஞ்சியசாலையில் மேற்கொள்ளப்பட்ட தேடல் பரீட்சிப்பின் போது வெளிக்கொண்டு வரப்பட்ட ரூ. 2,278,890 தொகை நிதி மோசடிக்கு உரிய வகையில் 2021 மார்ச் 24 ஆம் திகதியாகும் போது ரூ. 1,759,167 தொகை நிதி மாத்திரம் அறவிடப்பட்டுக் காணப்பட்டதுடன் ரூ. 519,723 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. இந்த மோசடிக்கு உரிய வகையில் ஆரம்பப் புலனாய்வுகளை 2021 டிசம்பர் 01 ஆம் திகதியாகும் போதும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

